# மறைந்த பெருமை

## (ஒரு செய்யுட் சரிதை)

527/95

கோவை கிழார்

2u12K
N52
194141

... நிலையப் பதிப்பகம்
1952.

# மறைந்த பெருமை.

## (ஒரு செய்யுட் சரிதை)

ஆக்கியோன் :

கோவை கிழார்

கோவை நிலையப் பதிப்பகம் (லிட்.)

கோவை

1952

தமிழ்நாடு ஆவணக் காப்பக நூலகம்
194141
சென்னை-600 008

# பொருள் அடக்கம்.


| | | |
|---|---|---|
| 1. | கோட்டையோ கோட்டை | 1 |
| 2. | அறிந்தார்யாரே | 8 |
| 3. | நினைவுக்கெட்டா நிகழ்ச்சிகள் | 11 |
| 4. | பண்டு கண்டவை | 21 |
| 5. | கடுமோகம் படுமோசம் | 29 |
| 6. | வஞ்சகப்போர் நெஞ்சகச்சீர் | 50 |
| 7. | மேனாட்டுப் பெருமகன் | 70 |
| 8. | வீரதீரம் | 78 |
| 9. | முடிப்புரை | 100 |


V21612K

# அணிந்துரை

சில ஆண்டுகளின் முன் என் அலுவலின் பொருட்டுப் பலநாடுகள் சுற்றவேண்டி வந்தது. அப்போது பல ஊர்களையும், கோயில்களையும், மலைகளையும், கோட்டைகளையும் பார்த்தேன். அவ்வாறு பார்த்து வருகையில் அனந்தபுரம் வட்டத்திலிருக்கிற குத்திக்கோட்டை என் மனதைக் கவர்ந்தது. அம்மலைக் கோட்டையின் மீதேறி இயற்கை வளங்களையும் செயற்கை நலங்களையும் கண்டு மிகவும் வியந்தேன். ஒவ்வொரு பகுதியின் சரிதங்களையும் கேட்டு மகிழ்ந்தேன். உணர்ச்சியை எழுப்பும் அச்சரிதங்களை நூல்களைக்கொண்டும் ஒத்துப் பார்த்தேன். அந்நினைவுகள் என்மனதில் வெகுநாள் குடிகொண்டிருந்தன. பிறகு ஓய்வு எடுத்துக்கொண்டு இலக்கியச் சோலையில் சுற்றிக்கொண்டிருந்தபோது அந்நினைவுகள் மீண்டும் எழும்பின. அந்த எழுச்சியின் பலன்தான் இந்தக் கவிதைச் சித்திரம். இதனைத் தீட்டி வெகுநாள் ஆயிற்று. ஆனால் இதனை வெளியிடத் துணியவில்லை. யான் எழுதிய 'வாழ்க்கையோ கவலையோ' என்ற கற்பனைக் கவிதையைப் பல நண்பர்கள் சுவைத்தார்கள். அதுகண்டு துணிவுகொண்டு அதற்குத் துணையாக இச்சரிதைக் கவிதை வெளிபோந்து உலா

வட்டும் என்று இந்தக் கவிதையை வெளியிட முன் வந்தேன். இதனைப்போன்ற சரிதைக் கவிதைகள் தமிழ்நாட்டில் குறைவு. ஒன்று இரண்டு நூற்றுண்டு களில் எழுந்த நாட்டுக் கவிதைகளில்மட்டும் இத்தன் மையக் கவிதைகளைக் காணலாம். தேசிங்குராசன் கதை, கான் சாயபு சண்டை, கட்ட பொம்மு கதை முதலிய அம்மானைப் பாடல்களில்தான் இப்படிப்பட்ட கவிப்போக்குகள் உண்டு. தெலுங்கில் பொப்பிலி ராஜு கதை, பல்நாடி வீரசரித்திரம் போன்றவை மிக உண்டு. தெலுங்கர்கள் அவைகளை மிகவும் மதிக்கிறுர் கள். தமிழர்களோ அவ்வளவாகத் தற்காலத்தில் அப் படிப்பட்டவைகளை மதிப்பதில்லை. ஆகவே எளிய நடையில் பாமரரும் படித்துச் சுவைத்து மகிழும்படி யாக தெள்ளத் தெளிந்த வகையில் இச்சரிதக் கவிதை எழுதப்பட்டுள்ளது. இப்படிப்பட்ட கவிதைகள் இன்னும் மிகுதியாக நாட்டில் எழும்பும்படி இது ஊக்கும் என்ற நோக்கத்துடன் இக்கவிதை வெளி யிடப்படுகிறது. மக்கள் படித்துச் சுவைப்பார்களாக!

**கோவை கிழார்.**

உ

கடவுள் துணை.

# மறைந்த பெருமை.

(குத்திக் கோட்டைச் சரிதை)

## 1. கோட்டையோ கோட்டை!

கோட்டையிதே கோட்டையிதே
குத்திநகர்க் கோட்டையிதே,
கோட்டைகளில் தலை சிறந்த
குத்திநகர்க் கோட்டையிதே,
வேட்டையிடும் கானவர்கள்
விதிர் விதித்து மெய்ப்பொத்தித்
தாட்டிகமாய்க் கால் செலுத்தாத்
தனிக் குத்திக் கோட்டையிதே,
ஆட்டிடையர் மந்தையுடன்
அணுகிடுவார் பகல் மேய்த்து
நீட்டிரவு வருமுன்னர்
நெடிதிறங்கும் கோட்டையிதே,
மாட்டினங்கள் விலாப்புடைக்க
மலைச்சருகு அருந்தியபின்
காட்டினத்தின் ஒலிவருமுன்
களித்திறங்கும் கோட்டையிதே. 1.

கோட்டையிதே கோட்டையிதே
குத்திநகர்க் கோட்டையிதே,
கோட்டை தனில் தலை நிமிர்ந்த
குத்திநகர்க் கோட்டையிதே,
நாட்டினிலே கண்காணும்
நாடனைத்தும் அடிவணங்கக்
கோட்டினிலே ஏறியதோர்
கொடிபறக்கும் கோட்டையிதே
வீட்டினிலே உண்டுறங்கும்
வெறுங்குடிகள் கவலையுறு
சேட்டினிலே அரசு செயும்
செங்கோலர் கோட்டையிதே
பாட்டினிலே பயில்புலவோர்
பண்விடுத்துப் பரவிவரும்
போட்டியினில் வெற்றிதரும்
புனிதமுடைக் கோட்டையிதே. 2.

கோட்டையிதே கோட்டையிதே
குத்திநகர்க் கோட்டையிதே,
கோட்டைகளில் தலை வணங்காக்
குத்திநகர்க் கோட்டையிதே,
கீட்டிசையும் மேற்றிசையும்
கிடுகிடென உடல் நடுங்கச்
சேட்டிசையும் அச்சமுறச்
சேயெனச்செய் கோட்டையிதே,

ஈட்டிமுனை கத்திமுனை
எதிர்த்து வர இயலாத
சூட்டுமுனைப் படை பெற்றுச்
சுழன்று வரும் கோட்டையிதே,
தீட்டிவரும் சிற்பமுறும்
திண்மதில்கள் ஓங்கிவர
நீட்டி வினைச் சதியலதால்
நெகிழவிடாக் கோட்டையிதே. 3.

கோட்டையிதே கோட்டையிதே
குத்திநகர்க் கோட்டையிதே,
கோட்டைகளில் தலையோங்கும்
குத்திநகர்க் கோட்டையிதே,
நாட்டினிலே அரியணைபோல்
நட்டநடு நாயகமாக்
கோட்டினிலே பீடமதைக்
கொண்டிலங்கும் கோட்டையிதே,
பேட்டையினிலே குடிமக்கள்
பெரிதுவந்து மெச்சிடவே
ஆட்டையிலே பேரூஞ்சல்
அலங்கரித்த கோட்டையிதே,
தீட்டியலா சுனைமழைநீர்
தெளிவடைந்த பாறைகளில்
தேட்டமுறப் படை யருந்தும்
தெண்ணீர்வாய்க் கோட்டையிதே. 4.

கோட்டையிதே கோட்டையிதே
குத்திநகர்க் கோட்டையிதே,
கோட்டைகளில் தலைநின்ற
குத்திநகர்க் கோட்டையிதே,
தோட்ட வகை தேராத
துதை மலர்கள் பூத்துவரும்
நாட்டமுடைச் சுனைநீர்கள்
நறுமணங்கூர் கோட்டையிதே
நீட்டமுடைக் கற்பாறை
நிலப்பரப்பின் மீதோங்கி
வாட்டமிலா ஆயிரமாம்
வளர் அடிநீள் கோட்டையிதே,
மேட்டிடத்துப் பாறையெலாம்
மேன்மைபெறும் கொத்தளங்கள்
கூட்டுறவால் படையினங்கள்
குடிகொண்ட கோட்டையிதே. 5.

கோட்டையிதே கோட்டையிதே
குத்திநகர்க் கோட்டையிதே,
கோட்டைகளில் தலைபெருகும்
குத்திநகர்க் கோட்டையிதே,
கோட்டைதனின் தோற்றமது
குடிகொள்ளும் கண்படிலே
நாட்டமதும் மறந்திடுமோ
நமதிதயம் போற்றிடுமே,

தேட்டமுறச் சமவெளியில்
திகழ்ந்திருக்கும் பெருங்குன்றே
வாட்டமிலா உருவமதில்
வல்லரக்கன் போன்றிடுமே,
நீட்டமுறும் இருபுயங்கள்
நீட்டியுறும் தகைமையிலே
கூட்டியுறும் தோற்றமதில்
கொலுவிருப்பான் அரக்கனுமே. 6.

கோட்டையிதே கோட்டையிதே
குத்திநகர்க் கோட்டையிதே,
கோட்டைதனில் தலைநிகரும்
குத்திநகர்க் கோட்டையிதே,
நீட்டிவிடும் கைகளினல்
நீள்நகரை அடைக்கலமாக்
கூட்டிவிடும் தன்னடிக்கீழ்க்
குடை நிழலை இடுவதுபோல்
தாட்டிகமாய் வீற்றிருக்கும்
தலை நிமிர்ந்த வல்லரக்கன்
நாட்டிடுவான் கொத்தளங்கள்
நல்லணைவாய்த் தோள்களிலே,
கோட்டினிலே சிகரமதில்
குடிவகுத்த வெண்பவளம்
நீட்டிடுமோர் திருமுடியாய்
நின்றிலங்கும் என்குவமோ. 7.

கோட்டையிதே கோட்டையிதே
குத்திநகர்க் கோட்டையிதே,
கோட்டைகளில் தலைநீட்டும்
குத்திநகர்க் கோட்டையிதே,
நாட்டரசன் அரண்மனையில்
நன்கமைந்த கொலுவிருக்கை
ஊட்டிடுமிப் பேருருவம்
உவமையிலை நிரம்பியதாய்க்
காட்டகத்துப் புன்செயினால்
களித்திருக்கும் மண்வளமோ
வீட்டகத்தின் அரங்கமதாய்
விருந்தோம்பும் விளைவதனால்,
மேட்டிடத்துப் பொன்விளைவால்
மேன்மையுறும் வட்டாரம்
வேட்டிடுமோர் பரப்பினைப்போல்
வியப்புதரும் அரங்கினுக்கே. 8.

கோட்டையிதே கோட்டையிதே,
குத்திநகர்க் கோட்டையிதே
கோட்டைகளில் தலைதூக்கும்
குத்திநகர்க் கோட்டையிதே,
நாட்டகத்தை வட்டாரங்கா
நாடியதோர் வல்லசுரன்
தாட்டிகமாக் கொலுவிருந்து
தன்னரசைச் செலுத்தியதை

எட்டியயலில் வசைவிடுக்கும்
இசைப்புலவன் மிகச்சினந்துக்
கூட்டிசைத்த சாபமதால்
கொலுவிருந்த நிலைமையிலோ
சாட்டினதில் கல்மயமாச்
சபித்தனனே எனும் வண்ணம்
நீட்டியுள திங்கியற்கை
தெரிந்துரைத்தல் மெய்யென்கோ. 9.

கோட்டையிதே கோட்டையிதே
குத்திநகர்க் கோட்டையிதே,
கோட்டைகளில் தலை கமழும்
குத்திநகர்க் கோட்டையிதே,
பாட்டைசெலும் பாறைகளில்
பருமரங்கள் இலாமையினல்
சேட்டைசெயும் கொசுவினங்கள்
செயுந் துன்பம் இங்கிலையே,
மேட்டினிலே படைவீடு
மேன்மேலும் எழுந்துளதால்
கூட்டினிலே குருவியைப்போல்
குளிர்காற்று நுகர்ந்திடுவார்,
நாட்டினிலே உடல்நலத்தில்
நாயகமாய் இத்துருக்கம்
போட்டியினில் பரிசதனைப்
புகழ்பெற்று விளங்கிடுமால். 10.

## 2. அறிந்தார் யாரே?

குத்திநகர்க் கோட்டைதனின்
குதூகலக் கோலமெலாம்

எத்திசையும் எத்திவர
இயம்பிடவும் இயலாமோ?

பத்திமையால் பற்றுறவால்
படித்தவரின் பண்டுறவால்

சித்தமதன் சீருறவால்
செப்பிடல்தான் சிறப்புறுமோ?

வித்தையிலே விளைவினிலே
விறலினிலே மிக்கவர்கள்

தத்தையினில் தடுமாறித்
தகையிலவாத் தந்திடுவார்

மொத்தமதில் முதன்மையிலா
முழுமையிலா மொழியாளர்

சுத்தமெனச் சூழ்நிலையைச்
சொல்லிடவும் சுகமாமோ? 1.

பண்டையநாள் சரிதமதைப்
பகுத்தறிவால் எடுத்தியம்ப

இண்டையருக் கல்வியுளார்
இந்நாட்டில் இலையென்கோ!

அண்டையிலே மக்களிடை
அமர்ந்துவரும் கதைகளையே

துண்டுகளால் கோவையதாய்த்
தொகுத்திட்டுக் கூறுவரால்,

மண்டையெலாம் பிளந்திட்டு
மாயமுறும் வெண்கதைகள்

வண்டுகளால் சேகரித்த
வளர்தேனில் மொழிவாரால்,

கிண்டுவதால் கிளறுவதால்
கிட்டிவரும் மெய்ச்சரிதம்

உண்டெனச்சொல் இந்நாளில்
உண்மையினை அறியோமே. 2.

ஆதலினல் மெய்க்கதையை
ஆராய்ச்சி செய்வோர்க்கே

ஓதலினற் பெற்றரிய
ஒழித்திடுவாம் இந்நூற்கண்,

காதலினல் நாட்டிலுறை
காட்டாட்கள் சொலுங்கதையை

ஈதலினல் இச்சிறுநூல்
இயற்றிட்டுத் தந்திடுவாம்.

சூதமரா நாட்டினத்தார்
சொல்வழக்கு வரலாற்றைப்

போதலரா மலரெனினும்
புதுமைபெறக் கூறிடுவாம்,

தோதமராக் கவியெனினும்
துதிவேட்டாக் கருத்தினிலே
தாதமரும் பண்பமைத்துத்
தந்திடுவாம் படிப்பவர்க்கே. 3.

குத்தியெனும் பெயரெதுவோ
கொத்தெனுமோர் சொல்லமைப்பால்
புத்தியுளார் முன்னாளில்
புனைந்திட்டார் எனப்பகர்வார்,
கொத்தெனுமோர் சொல்லமைப்பும்
கொடிமிடைந்த பூங்கொத்தாய்
ஒத்துளதென் றுரைத்தனராம்
ஊரார்கள் மகிழ்வினிலே,
அத்திசையில் பூங்கொத்தின்
அமைப்பினைப்போல் குன்றுகளும்
எத்திசையும் விளங்கிடவே
இங்குளதென் றியம்பினராம்,
பத்திமையில் நிலத்தெழும்பும்
பைங்குன்றும் பூங்கொத்தும்
குத்தியதன் குன்றுகளைக்
கூறினராம் வியப்புண்டோ. 4.

# 3. நினைவுக்கெட்டா நிகழ்ச்சிகள்.

மேனாளில் எழுமுனிவர்
மேனாட்டில் எழுந்தருளி
வானாடர்ச் சீமானின்
மதிக்குரவ ராயிருந்தார்,
வசிட்டனுடன் அத்திரியும்
வரத்வாசன் கௌதமனும்
கசியபனும் யமதக்னி
கௌசிகனும் அவர் ஆவர்,
தவமதனால் வழிபாட்டால்
தற்பயிற்சிக் கல்வியினால்
பவமதனை அடக்கினராய்ப்
பலப்பெருமை உற்றிருந்தார்,
அருந்தவத்தின் பயனதனால்
அண்டர்கா டிழிந்திவணும்
பெருந்தலங்கள் எழுந்தருளிப்
பேணியவர்க் குதவிடுவார். 1.

அவ்வரிய இருடிகளில்
அளவிறந்த தவத்தினராய்க்
கௌதமனும் பேராளன்
கனப்பெருமை உற்றிருந்தான்,
பாற்கடலைக் கடைகையிலே
பலபொருளில் அகலிகையும்
மேற்கடல்வாய் உதித்தனளாம்,
மெய்யழகைக் கண்டுபலர்

காதலினல் வேட்டனராம்,
கண்ணபிரான் அருந்தவத்துக்
கௌதமனுக் ககலிகையைக்
காதலியாய் தந்தனராம்,
அழகினிலே மிகுந்திருந்த
அகலிகையை மணம்செய்துக்
கழகமர்ந்த மிதிலேவழி
கௌதமனும் வசித்தனனும். 2.

காதலினல் வேட்டவர்கள்
கன்னிகைதன் மணம் அறிந்தும்
போதையினல் மதியிழந்த
புல்லியர்போல் ஆயினரே,
சூரரினத்தார் அவர்தாமும்
சூரம்செய்த போதையினை
நரரிடத்தும் காட்டினராய்
நாணமிலார் ஆயினரே,
காதலொரு படியேறின்
காமமெனும் நிலேயடையும்,
ஏதமதில் அக்குணத்தோர்
இமியளவும் உணராரே,
காமமதன் வலேசிக்கின்
கண்ணியமும் அவர்க்கிலேயே,
ஓமமதில் மிகப்பயின்றேன்
உளன்என்றல் தப்புவனே 3.

வானவரில் இந்திரனே
வயப்படுத்தல் ஆகாமை
தானமரும் பெருநிலைக்குத்
தகாதென எண்ணினனால்,
காமமது தலைக்கேறக்
காரிகையின் எழிலிழுக்க
ஏமமது மறந்தனனும்,
இழியதொரு வஞ்சகத்தால்
கோழியதன் குரல்விடுத்துக்
கோதமனை நதிக்கனுப்பிச்
சூழுதலை முன்னிட்டு
சூழ்ந்தனனால் பூனையதாய்,
நள்ளிருளில் முனிவடிவில்
நாரியினைத் தழுவி அதில்
புள்ளினமும் செயவொண்ணாப்
புன்றொழிலைச் செய்தனனால் 4.

நடுநிசியில் ஆறடைந்த
நாதன்முனிக் கௌதமனும்
உடுநிலையைப் பார்த்தறிந்து
உறைகுடிற்கு மீண்டனனால்,
எதிர்பாராப் பழிகுற்றம்
இல்லமதில் தடைபெறலில்
சதிபாரா நின்றழிந்தே
சாபமதை விட்டனனால்,

அகலிகையைக் கல்லாக
அமர்வேந்தைப் புண்ணாகம்
மிகவடையச் சபித்தனனல்
மிகுத்தெழுந்த சினமதனல்,
காரிகையும் கல்லானள்
கவின்வேந்தும் ஆயிரங்கண்
பேரிகைபோல் உடலானன்
பிறர் தூற்றும் பழிபெற்றே. 5.

பின்னொருநாள் இராமபிரான்
பெருமணத்தை முன்னிட்டே
உன்னரிய மிதிலைவழி
உற்றிடுங்கால், கால்மிதித்த
கற்பதுமை உயிர்பெற்றுக்
காரிகையாய் எழுந்திடவும்,
பொற்பமைந்த இரகுசொல்லால்
புருடனுடன் சேர்ந்திட்டாள்.
இந்திரனும் புண்ணகம்
இனிதடையக் கண்வடுவாய்
அந்தரத்திற் றன்னுலகம்
ஆண்டுவரச் சென்றனனே,
அன்றுமுதல் கௌதமனும்
அகலிகையோ டிலேக்குடிலில்
தோன்றுதொட்ட தவவாழ்வில்
தொடர்ந்திருந்தான் நெடுங்காலம். 6.

மற்றொருநாள் பன்னிருகால்
மனைழுகுன்றி வற்கடந்தான்
உற்றதொரு நிலையமதா
உயிர்களெலாம் நொந்தனவால்,

கௌதமனும் தியம்பகத்தில்
குடிலமைத்துத் தவமியற்றிக்
கௌதமியை வரவழைத்துக்
குடிநீர்பெற்றினி திருந்தான்,

அதுகண்ட பிறமுனிவர்
அத்தலத்திற் கெழுந்தமர்ந்து
புதுகுண்டப் புனலருந்திப்
புனிதமடைந் திருந்தனரால்,

விருந்தினர்க்குப் பயிர்விதைத்து
விளைநெல்லைத் தந்தருளிப்
பெருந்திருவில் குடில்நடத்தப்
பேருதவி செய்தனனால். 7.

செய்நன்றி மறந்திருந்த
சீலமிலாப் பிறமுனிவர்
தையலரும் தீர்த்தமதின்
தனித்தூய்மை கசக்கினராம்,

வற்கடமும் முடிவடைய
வளமழையும் பெய்தருள
சொற்கடந்த முனிவர்குழாம்
சூழ்ச்சியினைச் செய்தனரே,

உடனழைக்கக் கௌதமனும்
உடன்படான், அவன் பயிரை
இடனழிக்கப் பசுவிடுத்தார்,
இவ்வழிவைக் கண்டழிந்துப்,
புல்விடுக்கப் பசுமடியப்
பழிசுமத்திப் போனார்கள்,
இல்லறத்துத் தவங்கூட்டி
இனிதமர்ந்தான் அதுமுதலே. 8.

ஈரிடத்தும் தன்தவத்திற்
கிடையூறு வந்ததினால்
சீரிடத்தை வேறொருபால்
தேர்ந்திடுவான் சென்றனனே,
கௌதமியின் புனல்வழியால்
குடிவிடுத்துத் தக்கிணத்தில்
சீதமிலாக் கருநிலத்தில்
சேர்ந்தனனே கௌதமனும்,
பம்பையினைக் கடந்திடலும்
பாலைநிகர் களிமண்சேர்
கம்புவிளை கருநாட்டின்
கவின்பரப்பைக் கண்டனனே,
வல்லரக்கன் கொலுவினைப்போல்
வறக்குன்று ஒன்று எதிர்தோன்றச்
சொல்லமரா மகிழ்ச்சியினில்
சூழ்ந்தனனால் அதன்பாங்கர். 9.

திண்ணனார் மேனாளில்
திரள்வேட்டை ஆடினநாள்
அண்ணலார் காளத்தி
அணைந்தபொழு தம்மலைதான்
கண்டறியாக் கவர்ச்சியுடன்
கானவர்கள் மதிமயக்கம்
கொண்டறியா வேகத்தில்
கொண்டிழுத்த நிலைபோலக்,

கௌதமனும் கருநாட்டுக்
குன்றிடத்தை அணுகினதும்
செவ்விதத்தில் இரும்பொன்றைச்
சேர்த்திழுக்கும் காந்தமதன்
வேகத்தில் அக்குன்றும்
விண்ணவரும் வியந்திடவே
ஆகத்தில் அணைந்திடுமாம்,
அச்செயலை என்னென்கோ! 10.

உள்ளமதில் நின்றெழுந்த
உணர்ச்சியது ததும்பிடவே
கள்ளமிலா அன்புமிகக்
கனிந்தூர அடியணைந்துக்
குன்றதன்மேல் விரைவாகக்
குதூகலத்தில் ஏறஅவண்
மன்றதிலே செந்தமிழ்ச்சொல்
மகிழ்ச்சிசெயும் நிலையதனில்

பெருங்கற்கள் பாழியிலும்
பிளவினிலும் வாய்த்திருந்த
அருங்கனிநீர்ச் சுனைகண்டங்
கானந்தத் தமர்ந்ததனால்,
'இத்தெய்வ இடமலதோ
என்தவத்திற் குவந்த'தெனச்
சித்தமதில் நினைந்தெழுந்துச்
சிறப்புடனே தங்கினனால். 11.

அன்றுமுதல் சுனைநீரின்
அருகினிலே அமர்ந்திருந்துக்,
குன்றுதரும் தென்றலையும்
குடிநீரும் அருந்தினனும்,
தவமொன்றே தன்செயலாய்த்
தான்கொண்டு தனித்திருந்துப்
பவமொன்றை வென்றவனைப்
பலயுகங்கள் வீற்றிருந்தான்,
விலங்கேனும் மகனேனும்
வெறெந்த உயிரேனும்
துலங்காத நிலையினிலே
தூயதவம் இயற்றினனால்,
இந்தநிலை எத்தனைநாள்
இருந்ததுவோ எவரறிவார்?
அந்தநிலை உண்மையினை
அதன்பெயர்தான் சொலும்என்பர். 12.

குன்றுதனைக் குறிக்குங்கால்
கௌதமனின் குன்றெனவே
அன்றுமுதல் இன்றுவரை
அறிந்தோர்கள் இயம்பினரால்,
நெடுநாட்கள் கடந்தேற
நிகழ்ந்திருந்த அப்பெயரே
கொடுநாட்கள் வந்தவுடன்
குத்தியென குன்றியதாம்,
அந்நாட்டுப் புறத்தார்கள்
அக்குன்றின் முதற்பெயரை
முன்னொட்டிக் குறித்திடவோ
மொழிகுழறிச் சுருக்கினராம்,
ஆதலினால் இந்நாளில்
அரும்பெயரும் குத்தியெனத்
தீதமரா சொல்லாகித்
திகழ்ந்திடுமாம் எனமொழிவர். 13.

இத்தன்மை ஐதீகம்
இக்குன்றுக் கின்றுண்டு,
மெய்த்தன்மை இதனிடையே
மெய்ப்பித்தல் இல்லையென்க,
பண்டையநாட் புராணமெனப்
பறித்தெறிவார் பலருண்டு,
மண்டையினை ஒங்குமென
மாலுறுவோர் எங்குமுளர்,

ஆங்கிலத்தில் குறிப்பெழுதி
அனைவருக்கும் வெளியிட்டோர்

ஈங்கிதையும் வெளியிட்டார்,
இனியேனே விடவேண்டும்?

படித்தறிந்த விவரமெலாம்
பயின்றிங்கு தொகுத்திட்டோம்,

இடித்தெறிந்து உதறிடுவீர்
இயல்பமராப் பகுதியெலாம். 14.

## 4. பண்டு கண்டவை.

முச்சங்கக் காலத்தில்
    மூவேந்தர் தலைநகர்கள்
மெச்சிக்கட் டிடும்இடமோ
    மேன்மைபெறும் ஆற்றோரம்,
வஞ்சிநகர் உறையூரும்
    மதுரையுமே நதிக்கரையாம்,
கஞ்சிநகர் பூம்புகார்
    கானலிலா நீரோரம்,
என்றாலும் வேளிரெனும்
    எல்லையினர் அப்பொழுதே
குன்றாகும் அரணினையே
    குடியிருப்பாய்க் கொண்டனரே,
பொதினிமலை வேள்ஆவிப்
    பொதியமலை வேள்ஆயும்,
குதிரைமலை அதிகைமான்,
    குடியிருக்கை மலையன்றோ? 1.

பேரரசர் சமபரப்பில்
    பெரும்படைகள் கொண்டனராய்ச்
சீரரசை மருதமதில்
    செழிப்புளதாய் வகித்தனரே,
சிற்றரசர் எல்லைகளில்
    சீரமராக் காட்டகத்தில்
முற்றரசை வகிக்கிலராய்
    முடிக்குன்றில் இருந்தாண்டார்,

செந்தமிழ்நாட் டகத்தினிலே
    செவ்வியதோர் படிப்பிருந்தும்,
இந்தமுறை இருந்திடிலோ
    என்னுகும் பிறநாட்டில்?
சமநிலத்தில் ஆறலைப்போர்
    சார்புகளுக் கஞ்சினராய்
இமநிலத்து மலையரணே
    இருப்புகளாய்க் கொளல்இயல்பே. 2.

தெக்கிணத்துக் கருநாடத்
    தேயமெலாம் சமவெளியே,
எக்கணத்தும் அதைக்காக்க
    இயலாத பண்பலதோ?
என்றாலும் ஆங்காங்கே
    எழும்பிடுபல் கற்பாறைக்
குன்றுகும், திடலாகக்
    கொழுத்திருக்கும் காட்சிதரும்,
இந்தநிலை கண்டறிந்த
    இயல்மதிகூர் மன்னவர்கள்
சொந்தநிலக் காப்பாகச்
    சூழ்ந்தனரே அவைமதிலால்,
ஒவ்வொருகற் குன்றினையும்
    உயர்க்கோட்டைத் துர்க்கமதாய்ச்
செவ்வியபல் பண்பினிலே
    செய்தனராம் முன்னுளில். 3.

வாதாபிச் சளுக்கியர்கள்
　　வளம்பெற்ற நாளினிலே
ஈதாகும் வளமறிந்து
　　இயற்கையரண் ஆக்கினரே,
சம்பந்தர் காலத்தே
　　சமர்வென்ற சிறுத்தொண்டர்
தம்பத்தை வாதாபித்
　　தனிநகரில் தாபித்தார்,
அப்பழைய நாளினுமே
　　அம்மன்னர் வம்சத்தார்
துப்பறிந்து குத்தியிலும்
　　துர்க்கமதைக் கட்டினராம்,
ஆயிரம்செல் ஆண்டின்முன்
　　ஆளும்மன் விக்கிரமன்
போயிறங்கிக் குத்தியினைப்
　　புதுப்பித்தான் துர்க்கமதாய். 4.

குன்றின்மேல் பாறையெலாம்
　　கோட்டையதன் மதிற்புறமாய்
ஒன்றின்மேல் ஒன்றாக
　　உயரத்தே எழுப்பினதும்,
சரிவுகளைச் செதுக்கிட்டுச்
　　சாலையென அமைத்திட்டும்
பிரிவுகளை இணைத்திட்டுப்
　　பெருவழிகள் ஆக்கியதும்,

மேட்டிடங்கள் படைதங்க
மேன்மையுறும் படைவீடாய்
கோட்டிடங்கள் கொத்தளமாய்
கொடியேற்றும் தூணமைத்தும்,
பாழிகளில் நீர்தேக்கிப்
பனிநீரின் தடப் ஆக்கி
எழிருக்கைத் துர்க்கமதாய்
எழுப்பினதும் அம்மன்னர். 5.

இவ்விதத்தில் அரியபணி
இயற்றினதை எக்கவியும்,
செவ்வியதாம் பாடலிலே
செப்பினதும் இல்லையென்க,
அந்நாளில் அந்நாட்டில்
அரியசெயல் அறைந்திடுவார்
முன்னாளில் அவர்மொழியில்
முளைக்கவில்லை என்செயலாம்!

ஆனாலும் அக்காலத்
தரசர்குலம் ஆற்றியதை
கீனாளில் அறியுவண்ணம
கிட்டினரே கல்வெட்டில்,
கல்வெட்டுச் செய்தியினால்
கண்டறிவோம் இக்குன்றின்
செல்வமுறும் செய்தியினைச்
செப்பிடுவோம் ஒருசிறிதே. 6

சாளுக்கிப் பேரரசு
சரிந்தவுடன் இராட்டிரரின்
தோளுக்குக் கருநாடு
தொல்பளுவில் இறங்கினதே,
போசலர்கள் துவரையிலே
பொலிவடையக் குத்திமலே
காசலர்ந்த அவர்வயத்தில்
கண்சிமிட்டிச் சென்றதுவே,
திகழ்வீர வல்லாளன்
தேர்ந்தமைத்தான் மெய்க்கீர்த்தி
புகழ்வீர மொழிகளிலே
பொலிவுபெறக் குத்தியிலே,
விசயநகர்ப் பேரரசு
விறல்பெற்று முளைத்தவுடன்
நிசநகரக் குத்தியினை
நிறுத்தினதே தன்குடைக்கீழ். 7.

புக்கரசன் முதன்முதலாய்ப்
புகழ்பெற்ற தண்டெடுத்துத்
தக்கபடி குத்தியினைத்
தகர்த்தியதைப் பிடித்தனனே,
அதுமுதலே முன்னூற்றின்
ஆண்டுகளும் குத்திநகர்
புதுமுறையில் படைவீடாய்
பொலிவடைந்து விளங்கியதே,

பெருங்கிருஷ்ண தேவராயன்
பிரலயத்தும் அழியாமல்
மருங்கினிலே வலிமைபெற
மதில்எடுத்துப் புதுக்கினனே,
பகைவரெலாம் குத்திக்குப்
பலகாதம் ஒதுங்கிப்போய்
மிகைவணங்கி நடுநடுங்கி
மேற்செல்வார் அணுகாதே. 8.

கருநாடப் பேரரசின்
கனப்பெருமை முழுவதுமே
உருநாடிக் குத்தியிலே
ஊன்றியது வியப்பலதே,
தண்டொன்றே எப்பொழுதும்
தகுதியுடன் அங்கிருந்து
கண்டொன்று நடவாது
கரந்திருக்கும் அதன்மேலே,
முன்னாளில் துறந்தோர்க்கு
முதற்குடிலாய்த் திகழ்ந்ததுபோல்
இந்நாளில் தகைதண்டுக்
கிதவீடாய் இருந்ததுவே,
இவ்விதத்தில் தக்கிணத்திற்
கினிதுடனே சாந்தியினை
செவ்விதத்தில் தந்திடுமால்
சீர்பெற்ற குத்தியதே. 9.

தலைக்கோட்டைப் பெரும்போரில்
தாழ்வடைந்த பேரரசு
மலைக்கோட்டுப் பெனுகொண்டை
மாநகராய்க் கொண்டதுவே,

குத்திமலை அதனருகே
கோப்பாகி இருந்ததினால்,
மெத்தவலன் அதற்கிய
மிளிர்ந்திருந்து விளங்கியதே,

தலைநகர்க்கு நாற்புறமும்
தருங்காவல் எற்படலில்
மலைநகரில் குத்தியது
மதிப்பேற்கும் கீழ்க்காப்பே,

இந்தவகைக் குத்திநகர்
இறுமாப்பில் பெருஞ்சேனை
முந்திபெரு நாட்டிற்கு
முயற்றிறிடுமோர் நூற்றாண்டே, 10.

முகலாயப் பேரரசன்
முதிர் முசல்மான் ஔரங்கசீப்
இகலாய நாடெதுவும்
எதிர்வாழப் பொறுத்திருக்கான்,

தன்சமயத் தானெனினும்
தனிச்சமயத் தானெனினும்
முன்சகிக்கான் தனியரசில்
முற்றிருக்கப் பொறுக்காதான்,

தெக்கணத்தில் படையெடுத்துத்
தென்துருக்கர் நாடழித்தும்
அக்கணமே தன்னரசில்
அனைத்தினையும் சேர்த்திட்டான்,
இதன்பிறகு பம்பைநதிக்
கிக்கரையில் தண்டிறக்கி
முதன்மைபெறு இராயனுதன்
சீமையினில் புகுந்திட்டான் 11.

சீரங்க ராயனுமே
சீர்கெட்ட நிலையினிலே
போரங்கம் தனிலிருந்து
போர்புரிய ஆற்றலிலான்
தென்றிசையில் ஊரூராய்த்
திரிந்தோடி மைசூரில்
குன்றிடையே பதுங்கிவரும்
குறைவாழ்வில் இருந்தனனல்,
மன்னர்பிரான் பேடியைப்போல்
மானமிலா வாழ்வடைய
அன்னவன்தன் குறுமன்னர்
ஆற்றலுடன் எதிர்த்தனரால்,
அத்தன்மை வீரரிலே
அஞ்சாத நெஞ்சுடைய
குத்திநகர் நாயக்கனும்
குணம்குன்று தெதிர்த்தனனல். 12.

# 5. கடுமோகம் படுமோசம்

விஜயபுரி கோல்கொண்டை
　　வெற்றிகளில் வஞ்சகமே
விஜயமென நின்றதெனில்
　　வேறெதுதான் சொலல்வேண்டும்?
அவ்விருபேர் முசுலிமிய
　　அரசுகளும் வஞ்சனையால்
தெவ்வரிடைச் சிக்கினபின்
　　தீச்சிறையில் நசித்தனவே,
வெற்றியினல் மனமகிழ்ந்த
　　வெவ்வரசன் ஔரங்க்சீப்
பற்றிவிடப் படையெடுத்தான்
　　பாளையத்து நாயகர்மேல்,
விட்டதொரு படைத்தலைவன்
　　வெற்றியுடை மீர்ஜூம்லா,
கிட்டநறும் குணமில்லான்
　　கீழ்மையதே உருவமுளான். 1.

பெரும்படையை நடத்துவனாய்ப்
　　போராறு பலகடந்து
வரும்படையைத் தோற்கடித்து
　　வளநாட்டை வளைத்திட்டுப்
பலகாதம் நடந்திட்டுப்
　　பம்பைநதி கடந்திட்டுச்
சிலகாலம் அடுத்திருந்த
　　சில்லறையூர்ப் பாங்கெல்லாம்

படைத்தலைவன் மீர்ஜும்லா
பலவிதமாய் வென்றிட்டான்,
இடைத்தலைவர் ஆங்காங்கே
இருந்திடவும் அவர்மீது
சேனையினை ஏவிஅவர்
சின்னமெலாம் அழித்திட்டே
ஆனையினை ஒத்தவனாய்
அமரிலெலாம் சிதைத்தனனே. 2.

துர்க்கங்கள் பலவற்றைத்
தொலைத்திடவே முற்படுவான்
மர்க்கடத்துப் பிடிப்பதனின்
மானமிலாச் செயல்புகுந்தான்,
பெரும்படையும் ஆயுதமும்
பெருகிவர முன்சென்று
சுரும்பினம்சூழ் மலர்நிலையில்
சூழ்ந்திடுவான் துர்க்கமெலாம்,
சுற்றடர்ந்த வளமதுவைச்
சூனியமாய் குடித்திட்டு
மற்றுமுள வரப்போக்கை
மறுத்திடுவான் புகவொட்டான்,
குடிநீரும் அற்றுவரக்
குடிலங்கள் செய்திடுவான்
அடிநீரைக் கலக்கிடுவான்,
அரண்களெலாம் என்செய்யும்? 3.

இவைமட்டும் செய்தானென்
றியம்பிடலில் மெய்யில்லை,
எவைமுற்று வித்தானென்
றியம்பிடலும் சரியில்லை,

பெண்ணணங்கின் மாயமதில்
பெருமகிமை கண்டறிந்து
விண்ணவரும் நினைவொண்ணு
வியன்சூழ்ச்சிச் செய்திடுவான்,

பொன்னதனுல் ஆகாத
பொலிவுண்டோ, அதுமுற்ற
இன்னமுது போலதனை
ஈந்திடுவான் இனியென்னே!

இந்தவகை மாயமெலாம்
இயற்றிவினை முடித்திடலில்
சொந்தமுறை தாழ்வின்றிச்
சூழ்ந்திடுவான் வென்றிடவே. 4.

துர்க்கங்கள் படபடென
தொடர்ச்சியதாய் வீழ்ந்திடலும்
கற்கண்டக் குத்தியின்மேல்
கண்வைத்தான் கடைசியிலே,

அதுவரையில் எவராலும்
ஆற்றலினுல் தகர்க்கவொணு
முதுவரையைத் தானையினுல்
முற்றுகையும் செய்திட்டான்.

பலநூறு பட்டாளம்
பலதிசையும் படர்ந்துவரச்
சிலநூறு நிஜவீரர்
செங்குத்தி தனிலிருந்தார்,
ஒருகொசுவும் கோட்டையதன்
உள்புகாது வளைத்திட்டான்
தெருகுடிகள் வெகுமுன்னர்
தெரிந்தோடி மறைந்திடவே. 5

குத்திமலை நாயகனே
கொடுந்துருக்கன் செயலறிவான்
அத்திமுதல் எறும்பீறும்
அனைத்தினுக்கும் வகைசெய்தான்,
கோட்டைக்குள் ஓராண்டுக்
குடிநீரும் உணவுகளும்
வாட்டத்தில் உருவண்ணம்
வைத்திருந்தான் களஞ்சியத்தே,
சின்னஞ்சிறு படையெனினும்
சிறிதேனும் அஞ்சாத
கன்னெஞ்சு படைத்திட்ட
கருத்தினராய் இருந்தனரே,
இந்தவித முற்றுகையோ
எதிரிகளும் வியப்புறவே
அந்தமலைக் கோட்டையிலே
ஆற்றினரால் வெகுகாலம். 6.

முகலாயத் தளகர்த்தன்
மீர்ஜம்லா நன்கறிவான்
இகலாய நாயகனின்
எதிர்ப்புவலன் முழுமையுமே,
ஆயுதத்து வலிமையினுல்
ஆள்படையின் ஆற்றலினுல்
நாயகனின் சேனையினைக்
நசுக்கவொண தகைஅறிந்தான்,
பொன்னுலும் புகழாலும்
போற்றிவரும் தூதாலும்
அன்னனை அசைத்துவிடல்
ஆகாதென் றறிந்திட்டான்,
தன்றலைவன் மதிப்புபெறத்
தானுமவன் வஞ்சகத்தை
இன்றிழைத்து வென்றிடுவன்
என்றமுளம் பூரித்தான். 7.

உலகறிவில் முதிர்ந்திருந்த
ஒற்றுசில அழைத்தனுப்பிக்
கலகமது நிகழ்த்தாதே
கனிமொழியால் ஊர்நுழைந்து
நாயகனின் வழக்கங்கள்
நடைமுறைகள் அறிவதுடன்
மாயமதை இடவல்ல
மதிகூர்மை ஆள் அறிந்தும்,

அத்தன்மை ஆளிருப்பின்
அவர்செயலைக் கூர்ந்தறிந்தும்
எத்திசையும் அறியாமுன்
இழுத்துவர ஆணையிட்டான்,
ஒற்றர்கள் பொன்பெற்றுர்
ஊர் நுழைந்தார் மறுவேடம்
கற்றவரும் அறியாமல்
காட்டகங்கள் புகுந்தனரே. 8.

கூத்தாடி வேடத்தைக்
கொண்டொருவன் ஊர் நுழைந்தான்,
சாத்தானிப் பூவிற்போன்
சார்பினிலோர் ஒற்றுர்ந்தான்,
குடுகுடுப்பைச் சோனகனுய்
குறையில்லம் போயொருவன்
துடியுடுக்கை அடித்திட்டுத்
துணிந்திடுவான் பலஇல்லம்,
சங்கமனுய் மணியடித்துச்
சாளரங்கள் உட்சென்று
பங்கமிலா மங்கையர்பால்
பகுத்தறிவான் ஒருஒற்றன்,
வெண்கலத்துச் சேகண்டி
வேறெருவன் அடித்திட்டுக்
கண்களிக்க உளவறிவான்
காரிகைபால் தாசரியாய். 9

இந்தவகை பலஒற்றர்
பள்ளிகளில் புகுந்தங்ஙன்
எந்தவிதக் கபடங்கள்
எதுமறியா ஊரினரின்
மத்தியிலே பலவிதமாம்
மாற்றங்கள் விரித்துரைத்தே
எத்திசையும் அறியாமுன்
எத்தனத்தால் உளவறிந்தார்.
குத்தியதன் நாயகனின்
குணமுழுதும் உன்னதமாம்
எத்தினத்தால் மாறுட்டம்
இயற்றவொண்ணா தெனஅறிந்தார்
என்றாலும் ஒருவேசி
எழிற்றனிலே மயங்கியுளன்
அன்றுடும் அவளன்றி
அகமகிழான் எனஅறிந்தார்.

ஊர்வசியோ எனமயக்கும்
ஊர்வேசி ஒருத்திதனின்
ஆர்வமிகு நடனமதில்
அனைத்துலகம் மயங்கிவிடும்,
அன்னாளின் அகமுற்றம்
அணங்கினிலும் அழகுறுமெய்
பொன்னாளின் பொலிவதனில்
புகுந்திட்டான் புதுஒற்றன்,

கூத்தாடிக் குழலூதிக்
குரல்இனிமைக் குணம்ஊட்டி
வேர்த்தாடி 'வேசியவள்
வியப்பமர விருந்தளித்தான்,
வேசியவள் தந்திட்ட
வெகுபணத்தைப் பெறமறுத்தான்
காசினிடம் யாதுமொரு
கருத்ததுவும் இல்லையென்றே. 11.

வேசியவள் வேண்டிடலும்
வேறொன்றைக் கேளெனவே
தாசியுடை மோதிரத்தைத்
தந்திடுமா றடிபணிந்தான்
அதுதனது தங்கையவட்
கரசளித்த பரிசதுவால்
எதுபுதிதாய் வேண்டினும்
ஈவனென அறைந்திட்டாள்,
கூத்தாடி சரியெனவே
குதிகுதித்து பேச்சினிலே
நாத்தயக்கம் நாரியர்க்கு
நாணமுறும் எனச்சொன்னன்,
அதுகேட்டு வெட்கினளாய்
அதைஅவற்கு ஈயாளாய்
பொதுமுறையில் அதன்ஆற்றல்
புகன்றிட்டாள் அவனுக்கும் 12.

"என்றங்கை இசைவின்றி
யாழிதனை அளிக்கவலேன்,
இன்றிங்கு யாதொன்றும்
இயலாதால், நீசென்று
நாளைவரின் அவள்வருவாள்,
நற்சகுனம் நினக்கிருந்து
வேளைவரின் அவளிசைவை
வேட்டிடுவை" என்றுரைத்தாள்,
கூத்தாடி கைத்தவன்போல்
குறைகாட்டி உளமகிழ்ந்து
வேர்த்தாடி விடைபெற்று
வெளியேகி விடுற்றான்,
இரவெல்லாம் ஒருயுகம்போல்
இருநிலையில் கழித்திட்டுக்
கரவெல்லாம் நிறைநிலையில்
காரிகையின் மனைசேர்ந்தான். 13.

ஊர்வேசி உடன்பிறந்தாள்
உற்றிருந்தாள், அவள்வனப்போ
கார்வேளை ஆடுமயில்
கவின்தோகைக் கிணையாகும்,
அவள்முன்னர் கூத்தாடி
அளவிடாத இன்னிசையில்
நவமின்னும் நர்த்தனத்தை
நடித்திட்டுக் களிப்பித்தான்,

நாயகனின் நெஞ்சிழுத்த
நவகாமக் கிழத்தியுமே
மாயகனின் வலைதனிலே
மாட்டினளாய் மயங்கினளே,
வேண்டியதைக் கேளெனவே
விருப்பமுடன் சொன்னதுமே
நீண்டதொரு பணிவுறுத்தி
நீட்டினள்தன் விண்ணப்பம். 14.

மோதிரத்தைக் கேட்கஅவள்
முகம்கருகி நொந்திடுவாள்,
'ஓதிடுவே றெதனையுமே
உவகையுடன் தருவ'னென,
'சின்னஞ்சிறு குலத்தினர்தாம்
செப்பினதை மாற்றிடுவார்,
மன்னனிடத் தேவியரும்
மாற்றமதை மாற்றிட்டால்
மாற்றமதன் ஒலிக்கேற்ப
மாற்றமுமே அமைந்ததுவோ?
கூற்றதனில் பொய்யன்றிக்
குணமிலையோ' எனக்கடிந்தான்,
அக்காமக் கிழத்தியளோ
அவ்வாழி தனதல்ல,
இக்காரண மறியாதே
இயம்பலினி இதை'யென்றாள். 15.

தனதுசெபம் சாயாது
தக்கபடி தந்திரத்தால்
மனதுதனை திருப்பிடலே
மந்திரமாம் எனஅறிந்தான்,
'பொறுத்திடுவாய் பெருந்தேவி,
பொன்னாழி நினதிலதேல்
நிறுத்தியதை நீயணிய
நேர்ந்ததனல் யான்வேட்டேன்
என்றாலும் ஒன்றறிய
என்னெஞ்சு இச்சையுறும்,
அன்றாடு நீஅதனை
அணிதலுமேன்' எனக்கேட்டான்,
'மோதிரத்தின் மருமமதை
மொழிந்திடுவேன்' எனத்தனியே
வேதியதின் உள்ளறைப்பால்
வீட்டிற்குள் புகுத்தினளே. 16.

தனித்திருந்த சமயமதில்
தாசிசொல முற்பட்டாள்,
'மனித்தரிடம் கூறவொணு
மர்மமிதில் உள'தென்றாள்,
'மன்னவன்றன் முத்திரையால்
மதிப்புறுமிம் மோதிரமும்,
அன்னவன்றன் கோட்டைக்குள்
அடியாளும் போய்வரவே

இதுவொன்றே விதிதருமால்,
இதைப்பிறர்பால் விட்டிடவும்
விதிஇலதே, இங்கிலையில்
விதிபிசகின் உயிர்போகும்,
எனச்சொல்ல வியந்தவன்போல்
'எதிரிகள்சூழ் கோட்டைக்குள்
மனச்சலிக்காதெவண் செல்வாய்,
மற்றுமவன் கேட்டனனே 17.

'கோட்டைக்குள் நுழையஒரு
கொடிவழியொன் றீண்டுளது,
ஓட்டைக்குள் நுழைவதனால்
உட்செலலாம்' என்றுறைத்தாள்
'இவ்விதமாம் முழைவழியொன்
றிருக்குமெனில் அதிசயமே
செவ்வியதாம் அதைக்காணும்
சேவைஎனக் கீ'யென்றான்,
'பைத்தியமோ நினக்கிதைப்போல்
பரிசெதுவும் நினைவுகொளேல்
வைத்திருப்பின் நின்னெடுநாள்
வானெய்தல் உறுதி'யென்றாள்,
இந்தமொழி வெளிவரலும்
இரகசியப் பையெடுத்துத்
தந்தஒரு வைரசரம்
தகதகென எடுத்தளித்தான். 18.

'ஆகாகா, இதுஎன்ன
அற்புதமோ! நின்னை ஒரு
பாகாகும் இசைபாடும்
பழங்கூத்தி எனநினைத்தேன்,
மின்னொளிகூர் அரதனங்கள்
மிளிர்ந்தசையும் வைரசரம்
நின்னுடைய கரம்வந்த
நியமந்தான் கூறு'கென்றான்
'என்னிசையின் சீர்வியந்தே,
எழிற்றேவி, தெலிபாட்சா
தன்னகையை எனக்கீந்தான்,
தரித்துக்கொள் நீ!,என்றான்
அதைக்கேட்டு வியப்புற்றாள்,
அதைவாங்கிக் கண்பொத்தி,
'இதைக்கொடுக்க மனம்வருமோ
ஏழையவள்நீ', என்றாள். 19.

'ஏழையேநான், ஏழையும்தான்
இந்திரனுக் காட்பட்டால்
ஏழையும்நீ, ஆயிடுவாய்
இந்திரையாய் மெய்யலதோ?
குத்திநகர்ச் சிற்றரசன்
குடிவாழ்க்கை எதற்காகும்,
அத்திநகர்ப் பாட்சாவின்
அரண்மனையைச் சார்த்திடுங்கால்?

என்பேச்சைக் கேட்குவையேல்
இந்திரையின் போகமதை
நின்பேச்சோ நின்ஆகம்
நிரம்பிவிழும், ஓர்ந்திடுவாய்,
'ஆமாமாம் மதியிலியேன்,
அடியேனுக் கிப்பெருமை
ஆமாறு செய்குவையோ,
அடிபணிந்தும் அரற்றிட்டாள். 20.

ஒருசிலந்தி வலைகட்டும்,
உயர்மகனே அதைமெச்சும்,
கருசிறுத்த அறுகால்கள்
கவின்வலைக்குள் வீய்ந்தழியும்,
சிறுபுழுவின் ஊன் இழுக்கச்
சிலிர்த்துவரும் மீனினங்கள்
உறுபுதைமுள் தூண்டிலிலே
உற்றழியும் வியப்பலதே,
அரசவையின் வஞ்சனையில்
அன்றுடு கைதேர்ந்தோர்
சிரசதனுள் வெள்ளியரை
சிறிதளவில் மயக்காரோ?
ஒற்றதனில் தலைசிறந்த
உயர்மதிசூர் கூத்தாடி
மற்றனுகும் ஊர்வேசி
மயங்கிவிழச் செய்யானோ? 21.

நயமென்னும் மருந்தளிக்க
நாயகனின் வைப்பவளோ
சுயமென்னும் உணர்ச்சியுறச்
சூழ்ச்சிபெறும் மயக்கமுற
வைரசரம் மின்வலையில்
வனப்பென்னும் பசையொட்ட
உயிரிரசம் சுவைத்திடவே
ஓங்கிடுவாள் மெய்மறந்தே,
கூத்தாடிச் சதிவஞ்சம்
குடிமுழுகி ஆழ்ந்தவளாய்
எத்தாடி அவனடியில்
இதயமுற வீழ்ந்தனளே,
சதிசெயலின் முழுகதையோ
சாற்றிவரின் பெருகிவிடும்,
அதிசயமங் கேதுமிலை
அறைந்திடுவேன் ஓரளவே. 22.

ஊர்வேசி வடிவமைய
உடைதரித்தான் கூத்தாடி,
சோர்வேனும் சுகவீனம்
சூழாத கிழத்தியளோ
நிலவரைக்குள் அவனுடனே
நேர்ந்ததன்பின் முறைவழியே
மலைவரைக்கும் உட்சென்று
மலையரணுள் புகுந்தனளே,

மோதிரத்தின் ஆதரவால்
முழுவிடமும் கோட்டைக்குள்
மீதிஏதும் இல்லாமல்
மிகையாவும் காட்டினளே,
ஒற்றெனுமோர் முறையினிலே
உளவெல்லாம் நன்காய்ந்து
சுற்றினபின் கூத்தாடி
சோறுண்டு தங்கினனே 23.

இரவெல்லாம் சதிப்பேச்சே
இரகசியமாய் நடந்ததுவால்,
கரவெல்லாம் நெஞ்சமர்ந்த
காமத்துக் கிழத்தியளோ
மொகலாயச் சேனைக்கு
முறைபடியே உதவிகளை
இகலாரும் கோட்டைக்குள்
இயற்றுவதாய் வாக்களித்தாள்,
பதிலாகக் கூத்தாடி
பாட்சாவின் அனுசரணை,
நிதியாகத் தருவதென
நிரம்பியதோர் வாக்களித்தான்,
கோரியவா றவள்காட்டிக்
கொடுத்திடவோர் தேதிதனை
நாரியர்கள் உறுதிதர
நகர்ந்திட்டார் மனைகளுக்கே. 24.

குறித்ததினம் வந்தவுடன்
கூத்தாடி ஒருமேனு
நெறித்தவிசில் அமர்ந்திட்டும்
நிரம்பியபல் மேனுக்கள்
தனித்தனியே பின்ருெடரத்
தாசியின் வீடுட்புகுந்தான்,
மனித்தருள வறியாமுன்
மலைமுழைக்குள் சென்றவர்கள்
பெண்வேடம் பூண்டதனுல்
பிறர்ஐயம் இடஇயலார்
திண்வேலும் வாட்படையும்
திரைமறைவில் ஒளித்திருந்தார்,
மோதிரத்தின் துணைகொண்டு
முழைவிட்டுக் கோட்டைக்குள்
சூதிதுவென் றறியாமுன்
சூழ்ந்தனரே மறைமுகமாய். 25.

காமமதக் கிழத்தியளோ
காமவலை வீசுவளாய்
வாமமகன் நாயகனை
வலையினுக்குள் அகப்படுத்தி
உயர்சிகரத் தமைந்திருந்த
உல்லாசப் பவனத்தில்
அயன்பீடத் தமர்த்திசது
ரங்கமதில் ஆடினளே,

வேடமது பூண்டிவர்ந்த
　　வீரர்குழு பெருவாயில்
கூடமது சேர்ந்ததனைக்
　　குறித்தொலியொன் றெழுப்பினரே,
அதுவீசும் அரவம்கேட்
　　டணிகுடையொன் றேந்திட்டாள்,
முதுவாயில் திறந்ததுபல்
　　முகலாயர் உள்நுழைந்தார். 26.

அதுநடக்க ஒருகணமும்
　　ஆகவில்லை, நாயகனும்
சதிநடக்கும் எனக்கனவு
　　சற்றேனும் காணவில்லை,
கோட்டைக்குள் அவள்வீரர்
　　கொண்டிருந்தார் அதேநினைவும்
மூட்டைக்குள் எலிஇருக்கை
　　முந்தியவர் அறிந்திலரே,
படபடென வாசலொலி
　　படைவரவின் காலினொலி
தடதடென செவிநுழையத்
　　தண்டுவிழித் தெழுந்தோடும்
ஆயுதங்கள் நிலைநின்ற
　　அரண்வீடு சென்றனரே,
போயணுக அதைவளைத்து
　　முன்இருந்தார் முகலாயர். 27.

என்றும் மானமதே
    இயல்பாகக் குணம்வாய்ந்தார்
குன்றாத நெஞ்சினராய்
    கூறவொணாப் போர்விளைத்தார்,
கைக்குத்தும் வாள்குத்தின்
    கரைகாணும் எனவென்கோ!
மெய்க்குத்துப் பலவிடுத்து
    மிரட்டினரால் துறக்கத்தே,
நாயகனும் நன்கறிந்தான்
    நாணமிலா வஞ்சகத்தைப்
போயகற்ற வகையில்லான்
    போர்புரிய முன்சென்றான்,
தன்னாட்கள் விழுமுன்னர்
    தன்உயிரே பலிதந்தான்,
அன்னானின் கைவிறலால்
    ஐம்மடங்கை அழித்திட்டே. 28.

நாயகனும் அவன்படையும்
    நயவஞ்சத் தால்மடிய
வாயகன்ற புகழ்மாலை
    வகித்திட்டான் மீர்ஜும்லா,
மொகலாய ஔரங்க்சீப்
    முகமனுடைத் திருமுகத்தால்
இகலாயர் தோல்வியினை
    எழுத்ததனால் அறிவித்துக்

காமத்துக் கிழத்திதனை
கடிமணத்திற் குரியளென
நேமத்துச் செயல்புகழ்ந்து
நிருபமுடன் அனுப்பினனே,
மன்னவர்தம் மன்னவனோ
மாதவளின் செயல்கேட்டு
அன்னவளின் ஆசைதனில்
அருவருப்பே கொட்டினனே. 29.

'நின்வலையில் சிக்குண்ட
நினதரிய காதலனால்
நின்வயிற்றைப் பெருக்கினையே,
நினக்கணுவும் நன்றியிலை,
வைரசரம் ஒன்றிற்கே
விலையில்லாப் பணிஉயிர்கள்
நொய்ரவைபோல் நசித்திடவே
நோற்றனையே வஞ்சகமும்,
நினையானும் நம்பியுமென்
நிலையாவும் வயப்படுத்தின்
எனையாளும் இறைவனுக்கும்
இச்சையிரா தறிகுவையே,
காதலனுக் கபகாரம்
கண்டஒரு காதகிக்குப்
பாதகமோ, நீறறையில்
படுத்துவதே பல'னென்றான். 30.

மொகலாயத் தீர்ப்புக்கு
முன்எதிர்ப்பார் யாருளரே?
இகலாயர் நடுநடுங்கி
எதிர்சொல்வார் எவருளரே?
காமத்துக் கிழத்தியளை
காதலனின் சவத்துடனே
ஈமத்தில் இட்டெரித்தல்
இணையில்லா நெறியாகும்,
அந்தபெரும் மதிப்பவட்கோ
ஆற்றகிலார், இறைச்சொல்போல்
முந்திபெருங் குத்திமலை
முன்தொடரில் நீற்றறையில்
காதகியை எழுநாட்கள்
கனல்நீறில் இட்டனரே,
பாதகியும் தன்வினையால்
பழிதனக்காள் ஆயினளே. 31.

இன்றைக்கும் குத்திநகர்
எதிர்ப்புறத்தின் தொடர்மலையில்
அன்றைக்கு நீற்றறையில்
அறைந்திட்ட இடங்காட்டிக்
காதலனைத் துரோகித்த
கருநெஞ்சத் தாசியவள்
பாதகத்தை நீருக்கும்
படுகளத்தைச் சுட்டுவரே,

அன்னுளின் வெண்சுதைதான்
அழியாது நின்றுளதே,
இந்நாளும் காணிடுவிர்'
என்றுபகர் சொல்விடுப்பார்,
பாதகத்தின் அறிகுறியோ
பண்டுமுதல் இன்றுவரை
'காதகத்தை இனிசெய்யேல்,
கதைகாண்மின்' எனவிளக்கும். 32.

# 6. வஞ்சகப்போர் நெஞ்சகச்சீர்

பட்டணமாம் பட்டணமாம்
பலர்புகழும் பட்டணமாம்,
கட்டடங்கள் காவிரியால்
கவின் அடைந்த பட்டணமாம்,
பொட்டணம்போல் பொன்னிறுக்கி
பொற்புமிழ்ந்த பட்டணமாம்,
கொட்டமதை அடக்கிவந்த
கொலுவமர்ந்த பட்டணமாம்,
திட்டதுசெய் தாறுஅதற்குத்
திறல்தந்த பட்டணமாம்,
சொட்டளவும் பிறவீரர்
சூழ்ந்துவராப் பட்டணமாம்,
பெட்டகமாய் நகரமைப்பைப்
பெருமதில்சூழ் பட்டணமாம்,
கட்டணமாய் யாதுமுறுக்
காட்சிதரும் பட்டணமாம். 1.

பட்டணமாம் பட்டணமாம்
பார்புகழும் பட்டணமாம்,
சுட்டிவிடும் எக்குறையும்
சொலப்பெறாப் பட்டணமாம்,
திருமாலும் அரவணையில்
தெரிதுயில்கொள் பட்டணமாம்,
பெருமானும் அருகினிலே
பெரிதுவக்கும் பட்டணமாம்,

194141
சென்னை-600 008
V216/2K
152

வரனுலவும் மதிலடியில்
வானதிசெல் பட்டணமாம்,
கானுழையும் நீர்வளத்துக்
காவிரிசூழ் பட்டணமாம்,
சீர்சிறந்த வளம்சுரக்கும்
சீரங்க பட்டணமாம்,
நீர்நிறைந்த வளம்தரல்போல்
நெறியளிக்கும் பட்டணமாம். 2.

சீரங்க பட்டணத்தைச்
செங்கோலர் ஆண்டனரே,
போரங்கம் யாதின்றிப்
புகழுடையோர் ஆண்டனரே,
குடிகளது நலமதுவே
குணமதுவாய் ஆண்டனரே,
கொடிகளது சிறப்பதுவே
கூடிவர ஆண்டனரே,
கலைமகளும் அலைமகளும்
களிகூர ஆண்டனரே,
நிலைமகளாய் நீர்மகளும்
நிலைத்திருக்க ஆண்டனரே,
கன்னடூத்துப் பேரரசு
கனம்குறைக்கா தாண்டனரே,
பொன்னகத்து நன்னகர்போல்
பொலிவுறவே ஆண்டனரே. 3.

கன்னடியப் பேரரசு
கருநாடப் பரப்பையெலாம்
நன்னிலைமை யாச்சிலகால்
நகரிதனை ஆண்டதுவே,
கங்கர்குலம் முதன்முதலில்
கவின்நகரை அணைத்திட்டுக்
கொங்குமலர்த் தலைகாட்டில்
கொடிபரப்பி ஆண்டதுவே,
போசலர்கள் பழைவீட்டில்
பொற்பமரச் சிற்பமுடன்
காசலரும் அரசியலை
கண்திகைக்க ஆண்டனரே,
பம்பையிலே அரியரும்
பங்காளர் புடைசூழ
நம்பிடுமோர் நல்வழியில்
நகர்வாழ ஆண்டனரே. 4

சீரங்க பட்டணத்தைச்
சிறப்புடனே பின்கொண்டோர்
போரங்கம் புகச்சலியா
புதுஅரசு உடையார்கள்,
சிறிதாக முளைத்தஅது
சிக்குதேவன் ஆட்சியிலே
பெரிதாக வளர்ந்ததுவே
பெருங்கொங்கு நாடணைத்தே,

தொடதேவ ராசரசும்
துரைகண்டீர் நரசரசும்
வடதேயம் கீழ்த்தேயம்
வளைத்தணைத்தார் மைசூருள்,
பின்புசில ஆண்டுகளுள்
பீடமையா அரசுகளால்
துன்புசில நாடதற்குத்
தொடர்ந்தனவால் சிலகாலம். 5.

ஆற்றலிலா இளவரசர்
அரியணையில் ஏறிடவும்
ஆற்றலுடை அமைச்சவர்கள்
ஆண்டனர்தம் இச்சையைப்போல்,
ஐதரலிப் பெயருடைய
ஆர்வமிகும் போர்வீரன்
செய்தவமர் விம்மிதமாய்ச்
செறிந்துவரச் சிறப்புற்றான்,
பதவிதனில் மேன்மேலும்
பாய்ந்துபடைத் தலைவனுமாய்
உதவிதனில் தன்வாளே
உறுமுதவி எனநின்றான்,
புறவமைச்சர் யாவரையும்
புறக்கணித்துத் தானேயோர்
திறலமைச்சாய் நாட்டையெலாம்
தேர்ச்சியுடன் ஆண்டனனே. 6.

வலிமையுடை வாலிபரை
வாட்போரில் பழக்கிபெரும்
வலிமையுடைப் படையாக்கி
வடப்பகுதி வென்றிட்டான்,
வடபாலில் கன்னடமும்
வழங்குநிலம் எலாம்சேர்த்தி
குடபாலில் கடல்வரைக்கும்
குடகுடனே வென்றிட்டான்,
அந்தவிதம் மைசூரை
அகிலகரு நாடகமாய்
அந்தமிடும் பேரரசாய்
ஆக்கினவன் ஐதருமாம்,
மேன்மேலும் அகம்பெருகல்
மேன்னாட்டார் உடன்பொருதல்
கான்முளையால் நாடழிதல்
கணக்கில்லை, இவண்வேண்டாம். 7.

ஐதரலி ஓரொருநாள்
அயல்நாட்டை அடிப்படுத்த
கைதவருச் சேனையுடன்
கருநாடம் புகுந்தனனல்,
வடகுணக்கே குத்திமலை
வானளாவி நின்றதுகண்
டுடனடியில் அதைக்கொள்ள
உளம்கொண்டான், போர்புரிந்தே,

கற்பாறை மீதெங்கும்
கல்மதில்கள் உயர்ந்தோங்க
உற்பாதம் விளைக்குமிகு
உறுதிவெடி கண்டனனல்,
கோட்டையுளே மராட்டர்
கொடுந்தலைவன் முராரிராவ்
வாட்டமிலா நெஞ்சினனய்
வசித்திருப்பான் எனக்கேட்டான். 8.

வேறென்றைக் கருதிவரும்
வேகத்தில் இவ்விடத்தில்
சோறென்றைக் கண்டவன்போல்
சுரந்தனனல் வாய்நீரும்,
ஆனலும் ஐதரலி
அறிவதனில் தேர்ச்சியுளான்
போனலும் போகட்டும்
புறகதனைப் பார்த்திடுவேன்,
'ஒன்றாக்கி ஒன்றிழைத்தல்
உணர்வுடைமைக் குரித்தன்றாய்'
தொன்றாக்கிச் சொன்னவுரை
தோன்றியதும் அவன்மதியில்,
அவ்வரிய எண்ணமுடன்
அவ்விடத்தை விட்டகன்றான்
செவ்வியநாள் வரும்வரையில்
செழித்திருந்தான் ஐதரலி. 9.

குத்திமலைக் கோட்டையிலே
கொலுவிருந்தான் முராரிராவ்,
அத்திநகர்ப் பாட்சாவும்
அவனுற்றற் கஞ்சுவனும்,
தென்றிசையின் குறுமன்னர்
திரட்படையின் வரவென்றால்
தென்றிசையன் தூதரென
தெருவிடுத்து மறைந்திடுவார்,
மராட்டியப் படைத்தலைவன்
மாப்புகழில் வெகுவருடம்
இராட்டியரின் குலக்கொழுந்தாய்
இலங்கினனால் தெக்கிணத்தில்,
அவன்குலத்தால் பாரதரின்
அரும்புகழும் பெருகினதால்,
தவக்குலத்தின் பெருமைதனைத்
தனித்துரைத்தல் மிகநன்றே. 10.

முல்லைநிலப் பாங்கினிலே
முளைத்தெழும்பும் நெடுங்குன்றை
எல்லைநிலத் துருக்கமதாய்
இயற்றினநற் பெருநாட்டில்
துருக்கருடைப் படையெடுப்பைத்
துணிகரமாய்த் தொலைத்திட்ட
வருக்கமதில் உதித்தபெரும்
வலிமையுடைக் குடியினிலே,

உதித்தஒரு வாலிபனும்
உடும்போன்றின் வால்பற்றி
எதிர்த்தபெரும் படைநசுக்கி
எதிரிபுகாக் கோட்டையதன்
செங்குத்துக் கல்மதிலைச்
செங்கையால் தாவினதால்
அங்குற்றுக் கோர்பதேஎன்
றரும்பெயரைப் பெற்றனனல். 11.

விஜயபுரிச் சுல்தானின்
விறல்படையில் சேர்ந்தவனைச்
சுஜனர்தம் பெரும்புகழ்க்குச்
சூத்திரமாய் விளங்கினனல்,
அத்தலைவன் பெற்றெடுத்த
அரும்புதல்வன் இந்துதமை
எத்துணையும் காத்ததினல்
இந்துராவ்ப் பெயர்பெற்றான்,
யாருற்றும் இந்தேன்றுல்
யாதாமோர் உதவிசெயும்
காருணியப் பேராளன்
கடுமமரே சிறப்பென்போன்,
அன்னனின் பெருந்தேவி
அருந்தவம்செய் தரன் அருளால்
பொன்னனை பெரும்புகழின்
பூமாலை ஈன்றனளால். 12.

கொடியவரைத் தண்டித்துக்
குணத்தவரைக் காத்திடலால்
முடியதனுக் குரியனென
முராரியவன் பெயரிட்டார்,
அப்பெயருக் குகந்தபடி
ஐயனிடம் அரியணையை
ஒப்பியநல் முறைப்படியே
உரிமையுடன் பெற்றனனல்,
இளமையிலே போர்ப்பயிற்சி
ஏற்றதனில் நிபுணனுமாய்
கிளைமருவப் படைவிளங்கக்
கிழக்குதிக்கும் கதிர்போல்வான்,
எத்திசையும் படைசெலுத்தி
எமனுலகுக் கன்னியரை
நித்தியமாய் அனுப்பிவிடும்
நியமமதைக் கைக்கொண்டான். 13.

விறல்விஜயன் பான்ஸ்லேயின்
வெற்றிபெறு படையெடுப்பில்
திறல்விளங்கும் வலதுகரத்
தின்துணைபோல் அவன்சென்றான்,
ஆர்க்காட்டுத் தோஸ்த்தலியின்
ஆருயிரைத் தாமலிலே
சேக்காட்டும் வாளதனல்
சேர்த்திட்டான் யமனவைக்கே,

அதுமுதல்கொண் டார்க்காட்டின்
அன்னியரைத் துரத்திடவும்
சதிமுதல்செய் பறங்கியரின்
சார்பகற்றப் போர்விளைத்தான்,
புதுச்சேரிப் பிரஞ்சியரின்
பொய்ம்மாயம் வெளுத்திடவே,
பொதுச்சேவை விளைத்திட்டான்
போர்முனையில் புகுந்திட்டே. 14.

முராரிராவ் பெயர்சொன்னால்
மூடிடும்வாய் அழுங்குழவி
முராரிராவ் படையென்றால்
முகம்மதியன் வெருண்டோடும்,
மராட்டியர் வரவென்றால்
மனங்கலங்கும் பறங்கியர்கள்
மராட்டியர் சேனையெனின்
மறைந்தோடும் பிரஞ்சியர்கள்,
முராரிராவ் அருகுறிலோ
முகங்களிக்கும் இந்துக்கள்
முராரிராவ் அணுகிடிலோ
முழங்குமணி கோயிலிலே,
இந்தவகை எதிரெதிராம்
எண்ணங்கள் நாட்டிலுறும்
அந்தவகை அற்புதங்கள்
ஆற்றிடுமே அவன்பெயர்தான். 15.

தந்தைவழிச் சுண்டூரும்
தன்வழியே குத்தியதும்
சொந்தபுரி இரண்டாகச்
சூடுவனல் தன்னுரிமை,
பின்னளில் குத்திதனைப்
பெருநகரி ஆக்கிவிட
முன்னலே கொத்தளங்கள்
முழுமையுமே கட்டினனல்;
கொலுவிருக்கை மண்டபமும்
கூடமொடு கோபுரமும்
நிலைவையுறு களஞ்சியங்கள்
நிறுவினனல் கோட்டையதில்,
முதுவேனிற் பருவத்தும்
முறைகோடா நீர்வசதி
பொதுவேட்கை தீர்த்திடவே
புதுப்பித்தான் மலையெங்கும். 16.

மிகவலிய மகிமையிலே
முராரிராவ் மலையிருக்கை
தகவினர்கள் சொலக்கேட்டுத்
தாமதித்து வருவனென,
ஐதரலி மனமின்றி
அண்டையநா டேகினனல்
மெய்தவரு தம்மொழியில்
மீண்டிடவும் பத்தாண்டில்,

அருகிருந்த பற்பலநா
டகப்படுத்தி அக்கெடுக்குள்
பெருகிவந்த பணம்படைப்பால்
பெரும்புகழை அடைந்திருந்தான்,
குத்திகிரி வென்றிடவும்
கொண்டமொழி செலுத்திடவும்
உத்தரத்துத் திசைவழியே
உற்றனனல் கொடும்வீரன். 17.

பத்தாண்டில் ஐதரலி
படைவலிமை மிகவிக்கிச்
சத்தாண்ட பெரும்புகழில்
சகிக்ககிலா உயர்வுற்றான்,
குத்திகிரி முராரியனே
குறைவில்லா நெஞ்சுடைத்தும்
ஒத்தவய திலனாகி
உற்றிருந்தான் முதுவயதை,
என்றாலும் வீரமதில்
எவருக்கும் எதனுக்கும்
குன்றாத விறலமைந்த
குருதியினைப் பெற்றிருந்தான்,
ஐதரலி படையெடுத்தான்
அன்னமொழி கேட்டதுமே
கைதவறு படைமிகுத்துக்
காத்திருந்தான் குத்தியிலே. 18.

முகமதியன் சேனையதோ
முற்றுகையை மேற்கொண்டு
புகவரிய நெருக்கடியை
புகுத்தியரு கழித்திடுமே,
வெளிமதிலை நகரிதனை
வென்றிட்டும் பயனில்லை
துளிமதிலும் மலையரணில்
தொட்டிடவும் ஆகவில்லை,
மலையரணுள் காட்டரசன்
மாதிரியில் முராரிராவ்
தலையரணைச் செருக்குடனே
தாங்கினனல் ஒருவருடம்,
கவலையதும் அச்சமதும்
கருவினினுமே கண்டறியான்
திவலையதும் அஞ்சாமல்
தெளிவுடனே பொறுத்திருந்தான் 19.

முற்றுகையில் அடிக்கடியோ
முரண்டடித்து வெளிப்போந்துச்
சுற்றுவளை முசுலிமரைச்
சுட்டெரித்துச் சென்றிடுவான்,
இந்தவிதம் ஒருவருடம்
எதிர்ப்பதனைக் கண்டுஜதர்
சொந்தவிதம் தழுவினனே
சூழ்ச்சிதனுள் தலையிட்டே,

பணமதனால் மயக்கிவரும்
பரத்தையரால் பேதித்தான்,
குணமதனால் சிறந்திட்ட
குத்தியரண் அசையவில்லை,
கதைஉண்டு அவன்தாசி
காட்டிட்டாள் எனமொழிவர்,
அதைவிண்டு நம்புவரோ
அங்கில்லை சரிதமதில். 20

பருவமழை குன்றிடவும்
படுவேனில் கொளுத்திடவும்
ஒருவருடம் நீர்ச்சேர்க்கை
உலர்ந்துவரின் நெஞ்சென்னும்,
அஞ்சாத நெஞ்சிருந்தும்
ஆறாத பகையிருந்தும்
கெஞ்சாத நீர்வேட்கை
கெடுக்காதோ மற்றெதையும்.
தன்னுயிரைக் காட்டிலுமே
தனதாட்கள் உயிரினையே
மன்னுயிராய் எண்ணுமொரு
மனமுடையான் முராரிராவ்,
நீர்த்தாகம் மயக்கவிழும்
நேர்மையுடைப் படையினர்பால்
வேர்த்தாகம் வெடிக்குமொரு
வியனன்பை மேவிடுவான் 21.

உடல்பொருளோ டாவியையும்
உதகரித்த படைவீரர்
கடல்பொறுமை கண்டுருகிக்
கடமைதனை ஆற்றிடுவான்,
அவர்களுயிர் தப்புவிப்பான்
அதன்மூலம் தன்னுரிமை
எவர்களிடம் சென்றாலும்
இனிதெனவே நம்பினனால்,
ஒருநூறு யிரம்பொன்னை
உதகரித்துச் சமாதானம்
தருநோக்கைக் கொண்டவனைத்
தன்தூதை அனுப்பினனால்,
ஐதரிடம் தூதுவனும்
அணுகினதும் சூழ்ச்சியினால்
கைதவத்தைக் கைக்கொண்டான்
கான்விலங்கில் கடைகெட்டான். 22.

கப்பமதைக் கைக்கொண்டான்
காருணியம் காட்டுவன்போல்,
செப்பரிய இங்கிதமும்
சேர்கணக்கில் பேசினனால்,
இனியபுகழ் உரைப்பதிலே
இரண்டுதினம் கழிந்ததுவால்
கனிமொழி பரப்பினதில்
கழிந்துசெலும் மூன்றும்நாள்

தூதுவனும் புகழுரையில்
துதிகேட்டுச் சலித்தனனே
போதிதனல் போக்குவதில்
புன்மையுறும் எனநொந்தான்,
பொல்லாத பேச்சினிலே
புனல்வரட்சி வெளியிட்டான்
கல்லாத ஐதரலி
கண்டுகொண்டான் உளவதிலே. 23.

தூதுவனை விருந்தென்றும்
துணையென்றும் உபசரித்துச்
சூததனல் கோட்டைக்குச்
சொல்விடுத்தான் அபயமதை,
காவரண்டு கண்குழிந்து
நாவெழாப் போர்வீரர்
தீவிரமாய் கோட்டையில்தான்
திறந்துவெளி விரைந்தார்கள்,
ஐதரலிப் படையினரோ
அருநீர்க்குப் பதிலாகக்
கைதவத்துக் கடும்நெஞ்சில்
கையீட்டில் குத்திநின்றார்,
படைவீரர் தங்குருதிப்
பானகமே தாம்பெறலில்
கடைதேறி சூதறிந்துக்
கத்தியினல் போர்புரிந்தார். 24.

நெடுவாயில் திறந்தபினர்
நேரிடும்போர் பயன்தருமோ
கொடுவாயில் நீரில்லை
குருதியதே குடித்திட்டார்,
படைவீரர் அனைவருமே
படுகளத்தில் உயிர்துறந்தார்
கொடைவீரன் முராரியதன்
கொடுவினையை அறிந்திட்டான்,
அடக்ககிலாச் சினமதனல்
அடித்துதறிக் குத்திட்டான்
நடக்ககிலாப் பிணக்குவியல்
நடையிலெது செயமுடியும்,
ஆயிரமாள் அவன்மேல்வீழ்ந்
தபயத்திற் கெதிரிடையாய்
நாயதனைக் கட்டுதல்போல்
நாணதனல் பிணைத்திட்டார். 25.

கிழச்சிங்கம் பிணைப்பதனில்
கிடைத்திடினும் உருமுகளால்
முழைச்சிங்கம் முரைப்பதிலும்
மும்மடங்கு சீறிட்டான்,
காலுக்கும் கைகட்கும்
கரும்பொன்னல் பிணைப்பிட்டு
வேலுக்கும் கொடியவராம்
வீரர்சிலர் காப்பினிலே

இரும்பதனின் முழைக்கூண்டில்
இருத்திட்டுச் சென்றார்கள்
குரும்பருடை நிலமதற்குக்
கோட்டைக்குள் அடைத்திடவே,
யாருக்கும் அடங்காத
இணைவீரன் முராரிராவ்
பாருக்குள் பணிந்ததுவோ
பகர்காலன் பாதமதே. 26.

வஞ்சகத்தால் பெற்றபலன்
வளம்தருவ தாயிருந்தும்
எஞ்சுவதில் நிலையுறாமல்
இழிந்தேகும் அதுஇயற்கை
குத்திதனைப் பற்றியவன்
கொலைக்கஞ்சா ஐதரலி
சித்திதனை மகிழாமுன்
தென்றிசையோன் அடிசேர்ந்தான்.
அரியணைமீ தேறிட்ட
அவன்புதல்வன் திப்புஎன்போன்
புரியாரில் தன்நாட்கள்
பூர்த்தியதாய்க் கழித்திட்டான்,
ஆங்கிலர்பால் பகையுற்றே
அமர்விளைத்து நடுவயதில்
தாங்கிலனுய்ச் சமர்தனிலே
தன்னுடலை விட்டொழிந்தான். 27.

குத்திமலைக் கோட்டையதோ
குறைவில்லா மேன்மையிலே
சித்திர ஆங்கிலர்பால்
சிறப்புடனே விளங்கியதால்,
சிப்பாய்கள் பட்டாளம்
சிறிதளவில் அங்கிருக்கக்
குப்பாயம் போற்செவ்வை
கூடியதே அதுசிறக்க;
என்றாலும் முராரிராவ்
இயற்புகழே இன்றுவரை
குன்றாமல் குத்தியின்கண்
குடிகொண்டு விளங்கிவரும்,
நாடோறும் அயன்மக்கள்
நடுக்குன்றின் மீதேறி
ஏடோதும் இசைபாடி
ஏத்துவரே அதன்பெருமை. 28.

## 7. மேனாட்டுப் பெருமகன்
(மன்றோ பெருமகன்)

எவர்செய்த அறச்செயலோ,
யார்நினைத்த புண்ணியமோ,
எவர்செய்த வழிபாடோ,
யார்கருத்துத் தவமென்கோ,
ஆங்கிலர்கள் கால்வைத்த
அன்றுமுதல் பலவாண்டாய்
ஈங்கிவர்ந்த ஆட்சியினர்
இயற்கையிலே செயலாளர்,
வந்தவர்கள் பெரும்பாலும்
வல்லமையோ டாட்சிசெயும்
சிந்தையிலே மிக்கவர்கள்
சீர்மையையே கருதினர்கள்,
தாம்படைத்த ஊதியத்தில்
தக்கபணி வேட்டிடலை
ஓம்பியதை நிறைவேற்றும்
ஊக்கமதைக் கொண்டார்கள். 1

அக்கொள்கை கொண்டவராய்
ஆட்சிதனில் வலிவுறுத்த
திக்கொருவன் புகுந்தாண்டு
திடஆட்சி நிறுவினனே,
இராயலுதன் சீமையிலே
இனிமைதரும் செங்கோன்மை
பராயவழி வகுத்தவனே
பாரறிந்த மன்றோதான்;

இந்நாள்போல் அந்நாளில்
இமைகொட்டா முன்ஓடும்
இன்னாத காளான்கள்
இருக்கவில்லை எனல்வேண்டும்,
ஒருநாட்டை வகித்தாளின்
ஒருமாமாங் கத்தளவும்
உருநாட்டி வளம்பெருக்கி
உயிர்விடுத்தும் பணிசெய்வார். 2.

மருதநிலத் தருஞ்செய்யோ
மகிழ்தோட்டப் புன்செய்யோ
விருதுமலைப் பழம்பொழிலோ,
விளம்பிடவும் அங்கில்லை,
நிலமெல்லாம் கருமண்ணே,
நீண்விசும்பில் சிறுகுன்றே,
குலமெல்லாம் கருந்தெலுங்கே,
கூடமெலாம் குடிசையதே,
பெரியநதி எங்குமில்லை,
பெருகுவளம் சிறிதுமில்லை,
அரியதொழில் ஒன்றுமில்லை,
அருஞ்செல்வர் யாருமில்லை,
அவ்விதத்து நாட்டகத்தும்
அன்புமிகு நட்புரிமை
செவ்விதத்தில் வகுத்திருந்தான்
சீர்வள்ளல் மன்றோதான். 3.

செழுமைமிகும் நிலவளத்தில்
சீர்காட்டல் அரும்பணியோ,
அழுகைமிகும் வறியவரின்
ஆறுதலும் அருஞ்செயலோ,
இராயரகக் காப்பாளர்
இனியவாழ் வீட்டிடலே
துராயதெனச் சிரந்தனில்
திருத்தினவுன் மன்றோதான்,
முதலாளித் தரகர்களை
முடுக்கிட்டுக் குடிகளையே
முதலாளி ஆக்கினவன்
முடிபெறு மன்னனுமாம்,
இந்தவகை நற்பணியில்
இரவுபகல் பாடுபட்டுச்
சொந்தநிலம் போலாண்டான்
சொல்சீமான் மன்றோதான். 4.

குடியரசின் கொள்கைகளில்
குடிநேரில் தீர்வைதரல்
பொடியரசை விலக்கிவிடல்
இவ்விரண்டும் பொலிந்துளதாம்,
தன்னுரிமை பெற்றபின்தான்
தரகரினம் தொலைத்திடலே
முன்னிடுவார் அமைச்சர்குழாம்,
முன்பிந்த நினைவுண்டோ?

பாளையங்கள், ஜமீன்முறைகள்
பண்டையினும் மான்யங்கள்
கோளியங்கும் கொள்கைகளாய்
கொள்ளுதலும் இந்நாளே,
இவைகளெலாம் குடிமக்கட்கு
இன்னல்கள் செயுமென்றே
சுவைகளெலாம் சிதைத்தலைப்போல்
கடிந்தெறிந்தான் முனம்மன்றோ 5.

கொள்ளையிடும் தொழில்விறலோர்
குடிகளிடம் வரிவிடுத்துப்
பிள்ளைவகைப் பரம்பரையில்
பெற்றிருந்தார் தலைமையினை,
அந்தவகைத் தலைமையினர்
அரசனுக்குப் போர்புரிந்து
சொந்தவகை ஜாகீர்கள்
சூழ்ந்தனரே முன்னாளில்,
குடிகளிடம் அவர்விதிக்கும்
கொடியவரிச் சுமைகளுமோ
மடியினிடம் ஆழ்த்திவிடும்
மாண்பெதுவும் உருவணமே
ஜாகிரதைத் துடைத்தெறிந்து
ஜனங்களுக்கு ரயத்வாரி
ஏகவரி அமைத்திட்டான்
எளியர்அன்பன் மன்றோவே. 6.

ஆங்கிலமோ தாய்மொழியாம்
ஆளுனும் குடிமொழியை
தீங்கிலதாய்ப் பேசிவரத்
தெரிந்தனனும் மன்றோதான்,
நாட்டுப் புறங்களிலே
நாடோறும் சுற்றுவதால்
ஏட்டுச் சுரையதனில்
இயங்கானே தொழில்முறையில்,
எளியவரின் முன்செல்ல
ஏறுபரி மீதமர்ந்துக்
களியதுகூர் களிதெலுங்கில்
கவினுட்சி கண்டனனுல்,
இந்தமுறை ஆட்சியிலே
எளியவர்கள் நண்பனெனும்
அந்தமுறும் பெயர்பெற்றுன்
அரியபெரு மகன்மன்றே. 7.

பலவருட ஆட்சிதனின்
பலனுக மாகாணத்
தலைமையினைத் தந்தார்கள்
தனிப்பெருமை மன்றேக்கே,
பாகான செழுஞ்சாற்றில்
பாலமுது கலந்தாற்போல்
மாகாணப் பேராட்சி
மதிப்புதரும் அவனன்பில்,

பெரும்பதவி வகித்திருந்தும்
பின்னின்ற கருநாட்டை
சுரும்புமலர் கவர்ந்ததுபோல்
சூழ்ந்திடுவன் பலமுறையும்,
கார்ப்பருவத் தொருநாளில்
கர் நூலின் பகுதியிலே
ஆர்ப்பகுடி மக்களிடை
அணுகிருந்தான் சிலநாட்கள். 8.

பட்டிகொண்டைப் பாங்கரிலே
பருவமழை துளித்தவுடன்
ஓட்டிவந்த ஊர்மலங்கள்
ஊருணியில் கலந்ததினால்
மலக்கழிச்சல் வாந்தியுடன்
மக்களிடைத் தொத்திவரக்,
கொலக்கருதும் நோய்போக்கக்
குடிகளிடை சென்றடைந்தான்,
எளியவரை அடுத்தணுகி
இதமருந்தை வழங்கிட்டே
ஒளியளிக்கும் உடல்நலத்தை
ஊட்டினனால் ஊரெல்லாம்,
ஆபத்துப் பணிவிடையை
ஆற்றினதில் அக்கொடுநோய்
கோபத்துக் காளாக்கிக்
கொண்டுசெலும் அவனுயிரை. 9.

எளியவர்கள் நலமதனில்
இன்னுயிரைத் துறந்தபெரும்
அளியவனின் சடலம்கண்
டாற்றொணா துயர் அடைந்தார்,
'என்செய்கோம் அந்தோயாம்
என்செய்கோம் ஐயையோ
என்செய்கோம்' என்றென்றே
எடுத்தியம்பி ஊர்தேம்பும்,
மக்களெலாம் பெருமகனின்
மண்ணுடலை அமைதியுடன்
துக்கமுறக் குத்திகிரித்
துர்க்கமதற் கெடுத்தேகி
ஆர்வமுடன் போற்றின அவ்
வடிவாரப் பாங்கினிலே
கோர்வையுடன் நல்லடக்கம்
கொடுத்தனரால் மன்றோக்கே. 10.

பின்னொருநாள் அரசியலார்
பெருமகனின் சடலமதைச்
சென்னைநகர்க் கெடுத்தேகிச்
சீரடக்கம் தந்தனரே,
மன்னுயிர்க்கா யுயிர்தந்த
மன்றோவின் நினைவார்த்தம்
இன்னுயிர்போல் அவன்கொண்ட
எழிற்குத்திநகர் வெளியில்

அவன்பெயரால் சத்திரமொன்
றமைத்தனரால், வேறொருபால்
அவன்பெயரில் பூம்பொழிலொன்
றரசாங்கம் வைத்ததுவே,
சென்னையிலே மலைச்சாலைச்
சீர்வெளியில் பரியேறும்
சின்னமதை வெண்கலத்தில்
செய்தமைத்தார், யாம்காண்போம். 11.

சின்னங்கள் அமைந்தவிடம்
சேய்மையினர் உறும்பொழுது
முன்னங்கண் அறம்புரிந்த
மூதறிஞன் நினைவூட்டும்,
அன்னவகைப் பொதுஇயல்பே
அமைந்திருக்கும் பிறநாட்டில்,
உன்னிடுவீர் குத்தியிலே
உறும்வேறோர் வியப்புளதே,
கன்னடத்தோ டாந்திரரும்
கனகுடிகள் ஏழையரும்
முன்னறிந்த மன்றோவின்
முடிவறியா நினைவுடனே
அன்னவன்சீர் அடிமேதாய்ந்த
அகமெல்லாம் புனிதமுடைச்
சின்னங்கள் எனத்தொழுது
செலுத்திடுவர் காணிக்கை. 12.

## 8. வீரதீரம்.

குத்திமலைக் கோட்டையிலே
கொலுவிருந்தான் ஒருகர்னல்,
அத்திமரம் பழுத்ததென
அமைந்திருக்கும் அவன்படைகள்,
சிப்பாய்கள் கணக்கிலராய்ச்
செறிந்திருப்பர் அவன்படையில்,
குப்பாயம் அணிந்தவராய்ச்
குழுமிருப்பர் மலைமீதே,
அறையறையாய்க் கட்டிடங்கள்
அமர்ந்திருப்பர் படைவீரர்,
நிறைநிறையத் துப்பாக்கி
நிரம்பிருக்கும் படைவீட்டில்
ஜமேதார், சுபேதார்
சர்தார்கள் தலைமையிலே
அமீல்தார் முதலானோர்
அதிகாரம் செலுத்தினரால். 1.

காலையிலே விடிந்தவுடன்
கன்மலையை விட்டிறங்கிச்
சாலையிலே மரவரிசைச்
சார்பினிலே சென்றிடுவார்,
அடிவாரம் வந்தவுடன்
அங்கிருக்கும் வெளியிடத்தில்
கடியாரத் தமைதியிலே
கவாத்துமுதல் பழகிடுவார்,

இளம்வெயிலில் உடற்பயிற்சி
இயற்றியதும் மலையேறி
உளம்மகிழச் சிற்றுண்டி
உண்டிடுவர் படைவீரர்,
நாடோறும் இச்செயலில்
நடந்துவரும், அன்னார்கட்
கீடேது, கொழுப்பதனால்
எச்செயற்கும் அச்சமுறார். 2.

அப்படையில் சிப்பாய்கள்
அமர்ந்திருந்த கோலமதோ
செப்பரிய அச்சமதைச்
சேரிகளில் விளைத்திடுமே,
ஈட்டியுடன் துப்பாக்கி
இவர்காத்தில் விளங்கியுளல்
பாட்டியையும் குழவியையும்
பரிதவிக்கச் செய்திடுமே,
ஒருகாதத் தொலைவினிலே
ஊர்ந்துவரும் சேனையினால்
பெருகாத பயிரினங்கள்
பெறும்அழிவிற் களவுண்டோ,
பட்டாளத் தலைகுட்டை
பார்த்தவர்கள் ஓடிப்போய்
எட்டாத மரம்புதர்கள்
எறியொளித் தமர்ந்திருப்பார். 3.

இவ்வண்ணம் கருமைநிறத்
தினப்படையார் செயலிருக்க,
எவ்வண்ணம் வெள்ளையர்கள்
இயற்படையில் பயமுறுமோ?
சிப்பாய்கள் அண்டையிலே
செழித்திருக்கும் வெண்படையும்
குப்பாயம் பிரிதொன்ருய்ப்
பிறங்கிடுவார் அன்னர்கள்,
தலைமுடியோ இரும்பமைந்த
தகடதனல் அமைந்திருக்கும்,
உலைமுடியின் வாயிருக்கும்
உண்டிடலால் மதுவகைகள்,
வெள்ளைநிறப் போர்வீரர்
வெகுளியினைக் கண்டோர்கள்
கொள்ளையிடும் ஆறலைப்போர்
குணமதுவும் மேலென்பர். 4.

காலையிலே விடிந்தவுடன்
கவாத்துநிலம் புகுந்திடுவார்,
ஆலையிலே உடற்பயிற்சி
அணைந்திடுவர் சுருசுருப்பில்,
சிற்றுண்டி ரொட்டியுடன்
சிறுமலையின் பழங்களுடன்
மற்றுண்டி நிணத்தொடுமீன்
வகைவகையாய்த் தின்றிடுவர்,

மதுவகைகள் பலதினுசும்
மட்டின்றிக் குடிப்பதனால்
எதுவரினும் அஞ்சலராய்
இயங்கிவரும் நிலைபெறுவர்;
மாலையிலே மதுவகைகள்
மறுபடியும் திண்டியுடன்
மேலையிலே உண்டுவிட்டு
மேவிடுவர் துர்க்கமதில். 5

இவ்விதமாம் வாழ்வினிலே
இயல்பாகும் சோம்பலையோ
செவ்விதமாய் வரவொட்டார்
செயல்புகுத்தி மாற்றிழைத்தே,
நித்திப்புப் பாயசத்தில்
தெவிட்டாத வகைசெய்ய
நத்திக்கும் புளிகாரம்
நார்த்தையதன் ஊறுகாய்போல்;
திங்களுக்கு ஒருமுறையாய்
தேசமதில் சுற்றிவரப்
பங்கதனை ஏந்திடுவார்
பல்விளையாட் டமர்த்தியுமே;
இந்தவகைப் பெருமகிழ்வில்
ஏந்திடுவர் படைகளையே
பந்தயங்கள் பலவற்றைப்
பார்வையிலே வைத்திடுவர். 6

ஒரொருநாள் குத்தியிலே
        ஒருசெய்தி நடந்ததுவால்,
பாரதனைக் கேட்டுவிடப்
        பரிதவித்துத் திடுக்கிடுமே;
இனியெமது நாட்டகத்தே
        இனியதொரு வாழ்க்கையினைத்
தனியவர்கள் ஆற்றிடவும்
        தரமுண்டோ எனவினவும்,
கன்னியர்கள் நாட்டினிலே
        கற்புடனே பிழைத்துவர
அந்நியர்கள் விடுவாரோ
        அஞ்சுகிறேம் எனச்சொல்லும்,
குடித்தனத்தார் உயிர்வைத்துக்
        கொண்டிருக்கும் உரிமையினை
இடித்தடிக்கும் வெள்ளையர்கள்
        என்றகல்வார் என்றியைம்பும். 7.

இந்தவகைக் கொடியசெயல்
        எதிரிலராய்த் துன்மார்க்கர்
முந்தியொரு கணமளவில்
        முடித்ததனைச் செப்பிடுவாம்,
இன்பமெலாம் திரண்டுதவும்
        இளவேனில் பருவமது
துன்பமெலாம் நிலம்விட்டுத்
        தொலைத்திடவே வந்ததுவால்,

நாடெங்கும் குளிர்தொலைந்து
நலிவுடைந்து நற்றென்றல்
வீடெங்கும் முகமலர்ச்சி
விம்மிவிழ வந்ததுவால்,
ஊர்மக்கள் செய்களிலே
உற்றதொரு தானியத்தைத்
தேர்மலிய நிரப்பிட்டுத்
திண்தாழி கொட்டினரால். 8.

வேப்பமரம் இளந்தளிரும்
வெண்மலரும் பூத்துவரத்
தோப்புகளோ செந்தளிர்கள்
தூய்மணத்தை தெளித்தனவால்,
வண்டுகளின் தொகுதிகளோ
வளமலர்ப்பால் தேன்மாந்தி
தண்டுலவும் தாமரைபால்
தன்னொலியைச் செய்தனவால்,
கால்நடைகள் ஓடையின்வாய்
களிப்புல்லை மேய்ந்திட்டு
வால்நடையில் ஆட்டிமணி
வளப்புடனே திரிந்திடுமால்,
ஆடவர்கள் அந்திவிளை
யாடலிலே களிப்புறவும்
தோடவர்கள் கும்மிதனை
தொடுத்தினிமைப் பாஇசைப்பார். 9.

இரவுவர மதியமுற
இனியஉண வருந்தியபின்
பரவிவரும் தென்றலினைப்
படிகளின்மீ திருந்துகப்பார்,
பண்டையநாட் கதைகளுடன்
பாட்டுகளைப் படித்தவர்கள்
அண்டையிலே இசைத்திடவும்
அருகமர்ந்து கேட்டிடுவார்,
ஊர்த்தெய்வம் உகந்திடவே
ஊர்விழாக்கள் சாட்டிடுவார்,
கார்த்தெய்வம் கலங்கிடுமுன்
களிப்புடனே நடத்திடுவார்,
இந்தவகைக் களிப்பாட்டம்
எந்தசிறு கிராமத்தும்
சொந்தவகைக் குடிகளுமே
சூழ்ந்துவர எத்தனிப்பார்.

கார்ப்பருவம் பனிப்பருவம்
கடந்தவுடன் நிலப்பணிகள்
ஏர்ப்பகுதி குறைந்திடுமே
எளியவரும் களித்திடவே,
தென்றலுடன் இளவெய்யில்
தேர்ந்துவரும் இளமக்கள்
மன்றலினை முடித்திடுவர்
மதிப்புடனே நாடெங்கும்,

திருமணங்கள் நடத்திடவே
    தெருவிலெலாம் ஊர்க்கோலம்
வருமணங்கள் வளமதனை
    வாய்த்திடுமே எங்கெங்கும்,
ஊர்மக்கள் அதன்பொருட்டு
    ஊர்விட்டோர் ஊர்வகத்
தேர்வழியும் கால்நடையும்
    திரிவாரால் திசையெங்கும். 11.

குத்திமலை யரண்களிலே
    குடிகொண்ட பாளையத்தே
சத்திமலி உணவுகளைச்
    சாப்பிட்டு மதம்பிடித்த
வெள்ளையர்கள் பகுதியிலே
    வீற்றிழிந்த இருமுரடர்
கள்ளையுணும் வெறியினிலே
    கவாத்ததனை முடித்தவுடன்
மலைப்படிகள் திரும்பாது
    மதிப்புடனே ஊர்வெளியில்
அலைப்புரளும் நீர்த்தடத்தின்
    அருகணைந்துக் கரைவழியே
கைப்பிடித்த துப்பாக்கி
    கக்கத்தே தொங்கிவர
மெய்ப்பிடித்த போதையிலே
    மெதுநடையில் சென்றனரால். 12

மதுவரக்கன் மாயையிலே
    மட்டற்ற மயல்கொண்டுப்
புதுமையினைப் பழைமையிடத்தே
    புகைக்கண்ணில் பூத்திட்டார்,
இளவேனில் தென்றலுமே
    எழில்குளத்து நீர்ப்பரப்பில்
அளவேதும் இன்றியதாய்
    அருங்காற்றாய் அசைந்ததுவே,
கண்ணெதிரே கண்டதெலாம்
    கருவேளின் செயலதுவாய்
விண்ணெதிரே மறுமலர்ச்சி
    வியப்புதர உணர்ந்தார்கள்;
வெகுகாலம் பெண்முகத்தை
    வெறுமையிலும் கண்டறியார்
தகுகாலம் வந்ததென
    தாங்ககிலா உணர்வடைந்தார். 13

அந்நேரப் பகற்பொழுதில்
    அடுத்திருந்த ஊர்க்குடியாள்
சின்னேரம் காட்டகத்தில்
    செய்பணியை முடித்திட்டுத்
தன்னகத்தை அடைந்திடவே
    தனிமையிலே வழிநடந்து
நன்னகைசேர் குழவியரின்
    நாட்டகமே உட்கொண்டு,

எதிர்வந்த வெள்ளையரின்
    இயல்பதுவும் எண்ணாளாய்க்
கதிர்வளர்முன் கவின்மனையைக்
    கண்டிடவே விரைந்திடுவாள்;
பொலிவதனில் ஒருநாட்டுப்
    புறத்தவளே யன்றிமிக
மெலிவதனில் இருக்குமொரு
    மென்னடையாள் எனவிருப்பாள். 14.

ஒருநாட்டுப் புறத்தாளாய்
    உற்றிருந்தாள் அவளெனினும்
திருநாட்டின் அரம்பையளாய்
    தெரிந்தாளோ எனவென்கோ!
நல்லதொரு குடும்பத்தின்
    நலமுடையாள் ஆயிடினும்
அல்லதொரு பரத்தையளாய்
    அறிந்தனரோ எனஎன்கோ!
குழவியரைப் பெற்றெடுத்த
    குடிமகளே ஆயிடினும்
மழலைவிடா சிறுமடந்தை
    மதித்தாரோ எனஎன்கோ!
நாற்குணங்கள் முகத்தினிலே
    நடமாடும் தகையெனினும்
காற்குணமும் இல்லாளாய்க்
    கருதினரோ எனஎன்கோ! 15.

போதையிலே கண்சிவந்துப்
பொன்நிறமே கண்டனரோ
பாதையிலே வரும்பெண்கள்
பரத்தையராய்க் கருதினரோ?
இளவேனில் தென்றலினால்
இளகியதோ அவர்நெஞ்சும்
களவேனும் கருதாமல்
காமனுடை யடிவீழ்ந்தார்,
அறிவதனால் அடக்ககிலா
ஆசையினால் ஆழ்ந்தவராய்
பொறியதனின் புன்தொழிலில்
போந்தவராய் அறிவிழந்தார்,
மனமழிந்த உணர்வழிந்து
மங்கையிடம் ஓடினரால்
தனமழிந்து தன்நாட்டின்
தகையழிக்கும் செய்கையினர். 16.
வழிமறுத்தார் தம்பக்கம்
வாவென்று கரம்இழுத்தார்,
இழிமனத்தார் இயம்பகிலா
இழிச்செயலை இயற்றினரால்,
எதிர்பாரா வகையினிலே
இருதடியர் மேல்விழவும்
கதிர்வளவன் அன்றியொரு
காளையனும் அங்கில்லா

நிலையறிந்து கதறிட்டு
நினைவிழந்து வீரிட்டாள்,
உலையெரியும் வேகத்தில்
ஊர் அறியக் கத்தினளே;
மதியற்ற தடியர்களோ
மாதுடைய நிலையதிலே
கெதியற்ற பயங்கண்டும்
கிடந்தனரே கற்பழிப்பான். 17.

ஒருமுரடன் போதாதோ
ஒருமாதின் கற்பழிக்க
இருமுரடர் ஒருங்கணைத்தால்
ஏழைகளின் கதியென்னும்?
மலைப்பாம்பின் வாய்ப்பட்ட
மண்டுகம்போல் நிலையழிந்தாள்,
உலைப்பாலில் புழுப்போல
உடல்நெளிந்தே நடுங்கிட்டாள்;
அச்சத்தால் வீரிட்டும்
அருகிலெவன் இலாமையினல்
உச்சத்தால் ஓலமிட
உரக்கஒலி இட்டழுதாள்;
அரக்கர்களோ வாயடைக்க
அவள்துணியால் அடைத்திட்டார்,
இரக்கமிலாப் பாவியவர்பள்
ஏழையளை அமிழ்த்திட்டே. 18.

துணிகிழிய, உடல்கெளிய
　　துடிதுடித்தாள், படுபாவம்,
பணிகிழிந்த அரவினிலே
　　படபடப்பும் உற்றனளே;
புலிவாயில் பட்டவொரு
　　புல்வாயென் றியம்பிடவோ
புலிவாயால் கொன்றுணுமே
　　பொன்மானம் அழிக்காதே;
பாம்பின்வாய்த் தேரையதிற்
　　பயந்தாளாம் எனஎன்கோ
பாம்பதனை விழுங்கிடுமே
　　பழிபாவம் இயற்றுதே;
தூர்த்தர்பால் பட்டவளின்
　　துடிதுடித்தல் எனஎன்கோ
ஆர்த்துரைக்க அமைந்தவொரு
　　அரும்உவமை இலைஎன்கோ! 19

அத்துட்டர் செய்தசெயல்
　　அறைந்திடவோ அருவருப்பே,
எத்துட்டன் இந்நாட்டில்
　　இழைக்கிலா திழைத்திட்டார்;
கீசகன்தன் கைக்கிடைத்த
　　சௌரந்திரி எதுபட்டாள்,
கூசவிடும் வைதேகி
　　கொடியவன்பால் யாதுற்றாள்,

அன்னாரின் பலமடங்கு
அலமருந்தாள் உடல்நெளித்தாள்,
பொன்னாரும் மெல்லுடலம்
புழுப்போல நெளிந்ததுவே,
இராக்கதர்க்குப் பரிதாபம்
எங்கிருக்கும் மலப்பெருக்கால்
நிராகரிப்பை அவள்தடையால்
நிணக்கேட்டிற் குட்பட்டாள். 20.

கொடுமையதே உருவெடுத்த
கொடுந்துட்டர் செயலதனின்
கடுமையினைத் தெய்வமும்தான்
காணகிலா தாயிற்றே,
நெடுந்தொலைவில் பாதையிலே
நேர்ந்தஒரு வழிப்போக்கன்
கொடுந்தொழிலின் அரவமதைக்
கூர்ந்தறிந்தான் செவிநுழைய,

யாதோஓர் அனாதையளின்
இரக்கவொலி என்றெண்ணி
மாதேயாம் அவளோலம்
மற்றிலதென் றுணர்ந்திட்டான்,
சட்டெனவே உடையிறுக்கிச்
சாலைவழிப் பறந்திட்டான்,
துட்டர்செயல் கண்டவுடன்
துடித்திட்டான் சினத்தாலே. 21.

அருகணைந்தான் அனைத்தினையும்
 ஆய்ந்திட்டான் உயிர்துடித்தான்,
முருகனைப்போல் தலைநிமிர்ந்தான்
 மூடரைத்தான் தண்டிக்க;
வெள்ளையரில் இருமூடர்
 வெட்டவெளி என்றெண்ணார்,
சொல்லையென நினைத்தாரோ
 சுடுகின்ற கற்பதனை?
எம்நாட்டு மங்கைதனை
 எதிரில்லா இடத்தினிலே
முன்னீட்டும் காமத்தால்
 மூதறிவை இழந்தாரோ?
தலைக்கேறும் வெறியதனால்
 தாங்கவொணா தீங்கிழைத்தார்,
உலைக்கேறும் பலிவரினும்
 உதவிடுவன், எனவிரைந்தான். 22·

'அடகெடுவீர், தூர்த்தர்காள்,
 அருவருப்புச் செயல்வேண்டாம்,
மடமங்கை தனைவிடுவீர்,
 மாட்டீரேல் தலைஇடிப்பேன்;,
எனக்கூவி முன் அணைந்தான்,
 இவன்எதிர்ப்பை அவர்எண்ணார்,
மனக்கேதம் செய்யும்செயலை
 மற்றிவன்முன் செயத்துணிந்தார்;

மடமாதோ துணைவரவும்
        மனமகிழ்வில் கண்திறந்தாள்
அடமாக்கள் துணிவதனை
        அறிந்தங்கே மூர்ச்சித்தாள்:
வாலிபனோ சினமிகுந்து
        வானத்தில் குதிகுதித்தான்,
காலதனால் கைத்தடியால்
        கண்டித்தான் முரடரைத்தான். 23.

வெள்ளையர்கள் வெற்றிபெறும்
        வீரரெனத் தானறிவான்,
கொள்ளைமது கோலநிணம்
        குடிகொழுப்பர் எனஅறிவான்,
தன்கையில் கோல்மூங்கில்
        தடியொன்றே உளதறிவான்,
முன்கையில் உறுதிதரும்
        முட்டியதும் உளதென்பான்,
துட்டரிடம் ஈட்டியுடன்
        துப்பாக்கி இருந்திடினும்,
கொட்டிவிடும் மயலுண்டு,
        குரங்கினத்து மதியுண்டு,
அகந்தையினைக் கிளப்பிவிட்டு
        அருஞ்சண்டைக் கிழுத்திட்டால்
உகந்தவரை வென்றிடலாம்,
        ஒருகடவுள் உளனென்பான். 24.

தடியோங்கி அடித்ததினால்
தாம்பட்ட வடுநினையார்,
இடிபோலும் மற்றுமொரு
இணையடியும் விழுந்ததுவால்,
அப்பொழுது நினைவுற்றார்,
அவ்வெறுமைப் பாவிகளே,
ஒப்பெதுவும் இல்லையென்போர்க்
குறுதுணிவும் வந்திடுமே
"வெறுந்தடியால் ஒருகருமன்
வெண்துரையை அடிப்பானோ?
வெறுந்துணிச்சல் இனிச்சகியோம்,
வேட்டினையோ படிப்பதனை",
எனச்சொல்லி சினம்பூரித்
தீட்டிதனை ஏந்திடுவான்,
கனச்செருக்கில் துப்பாக்கிக்
கைக்கொண்டான் மற்றவனும். 25.

"கரியசிறு புழுவேநீ,
கடுநரகில் விழநினைத்தாய்,
எரியனலாம் எமதிதயப்,
என்றறிவாய், சீ,கெட்டாய்",
என்றோங்கிப் பல்இளித்து
இழிநகையால் இளித்திட்டு
முன்னோங்கி ஈட்டியதால்
முனைந்தொருவன் குத்தினனால்,

மற்றவனும் துப்பாக்கி
மருந்தடைத்துக் குண்டதனுல்
குற்றமிலா வாலிபனின்
குருதிபட விட்டெரித்தான்,
வாலிபனும் கண்சிவக்க
வசைவிடுத்துப், 'பாவிகளே
கோலிடுவான் தண்டனையைக்
கூற்றுவன், என்றுயிர்விட்டான். 26.

கொலைக்களமாய் முடிந்ததுவே
குளக்கரையும் அப்பொழுதே,
புலைக்களமாய் ஆகியதே
புதுவேனிற் குளத்தென்றல்,
குருதிமயக் களறியிலே
குலைந்திடுமே வீரனுடல்,
எருதுமயக் குலத்தவர்கள்
இழிந்தகுண வெள்ளையர்கள்,
உடைமுழுதும் செந்நிறமாய்
உற்றிருக்கக் கண்டவராய்ப்
படைமுழுதும் அறிந்திட்டால்
பலர் தூற்றும் என அறிந்தார்,
மாதினுயிர் அதுவும்போய்
மாண்டுவிழும் நிலையறிந்தார்,
போதையிலே மயல்செய்த
புன்தொழிலின் நிலைஉணர்ந்தார். 27.

குளக்கரைக்கு விரைந்தனரே
 கூட்டமது உருமுன்னம்,
அளக்கரிய குருதிதனை
 அலைநீரில் கழுவினரே:
திடச்சித்தம் உற்றவராய்த்
 திண்மலைபால் சென்றனரே,
அடற்சிறிதும் குறைந்திலராய்
 அறிந்திலரே தம்இழிவை;
'துணிச்சலுடன் கரிப்பையல்
 தொடர்ந்தசெயல் தடைசெய்தான்,
கணிச்சமதும் தாங்ககிலேம்,
 கன்னிகையும் இழந்திட்டேம்'
விரகமதால் எழும்பிவர்ந்த
 வீரமிலா இச்சொல்லை
நரகமதன் தீமனதில்
 நகைதுலங்கச் சென்றனரே. 28.

துப்பாக்கி வெடித்தவொலி
 தொலைஇடங்கள் கேட்டதுவே,
அப்பாலுக் கப்பாலும்
 அனைத்தஉயிர் செவியுறுமே;
திடுக்கிட்டுத் திணறிட்டுத்
 தீதொன்று நிகழ்ந்ததென
வெடுக்கிட்டு மங்கையர்கள்
 வீடுகளுள் ஒளிந்தனரால்:

நிலங்களிலே பணிசெய்யும்
நிலைமக்கள் விரைந்தனரே,
புலங்களிலே தொழிலியற்றும்
புவிமக்கள் நெருங்கினரே;
வெள்ளையரின் கோலமதை
வெறுப்புடனே நோக்கினரே
கொள்ளையரை வெறுப்பதுபோல்
குளங்கரைபால் அணுகாரால். 29.

வெள்ளையர்கள் போனவுடன்
வெகுளியது மேற்பொங்க
மெள்ளபடு களத்தண்டை
மேவினதே கும்பல்கள்,
நடந்திட்ட செயல்முழுதும்
நயனங்கள் காட்டினவே,
கடந்திட்ட காரியத்தில்
கடுங்கோபம் கொண்டனரே,
மடமங்கை கற்பழியா
வணம் அவளின் மானத்தை
திடமகனும் காத்திடவே
தீரமுடன் எதிர்த்ததனைக்
கண்ணாடிப் படம்போலக்
காட்சியது காட்டிடவே
புண்ணாடும் நெஞ்சினிலே
புகுந்தழுந்த நின்றனரே. 30.

ஊராண்மை ஆள்மூலம்
உற்றகொலை முழுவிவரம்
பாராளும் படைத்தலைவன்
பாங்கனுப்பச் செய்தனரே,
சுற்றமுள நாட்டவரோ
சுமங்கலியைக் கொண்டேகி
மற்றுமுள ஊரவரும்
மயானத்தில் சுட்டனரே;
மடமாதின் பொருட்டுயிரை
மாய்ந்தவனின் தீரமதை
இடமாதர் புருடரெலாம்
இனியபுகழ் கூறினராய்
ஊர்கோலம் கொண்டேகி
உடல்தகனம் புரிந்திடவே
தேர்கோலிக் கல்நட்டுத்
திருவிழாவும் தேர்ந்தனரே. 31.

பல்லாண்டு சென்றதுவால்,
பார்மைந்தர் மறக்கவிலை,
சொல்லாண்ட ஆண்மகனின்
சுடர்புகழின் கொழுந்ததனை;
சில்லாண்டில் அவன்நினைவின்
சின்னமதை நிலைநாட்டக்
கல்லாண்ட சாசனத்தைக்
கல்வெட்டி நட்டனரால்;

இல்லாண்ட மங்கைதனின்
இன்னுயிரின் மானமதை
அல்லாண்ட அரக்கருடன்
எதிர்த்திறந்த வீரனுடை
நில்லாண்ட சிறப்பதுவும்
சீர்ப்பெயரும் நாளினையும்
செல்லாண்ட நாளதுவும்
செதுக்கினரால் பார்த்தறிவீர். 32

## 9. முடிப்புரை.

குத்திகிரி மேனுளில்
  கொண்டசிறப் பறிந்தபடி
சித்தரித்துப் பாடலிலே
  செப்பினமே, இது அறிமின்;
ஒரோருநாள் எமக்கிருந்த
  உரிமையிலே, அக்கிரியின்
சீரறிய அதன்மீது
  சென்றனமே களிப்புடன்யாம்;
அங்கமர்ந்த நன்மக்கள்
  அனைத்தினையும் காட்டியபின்
பொங்குணர்வில் நற்கதைகள்
  பொழிந்தனரே யாம்வியக்க;
அவைகேட்டுப் பலநாளும்
  அதேநினைவில் இருந்திட்டேம்;
கவிதீட்டி அவைபிறர்க்குக்
  காண்பிப்பான் முயன்றனமே. 1.

பண்டைநிலே வெகுசிறப்பே,
  படித்தவரே நன்கறிவார்,
அண்டைநிலே ஒருசிறிதும்
  அறியாரே பெரும்பாலார்,
இந்நாட்டின் பெருமையெலாம்
  இவ்விதமே அமைந்திருக்க,
தென்னுட்டார் மிகநன்ருய்
  தெரிந்துள்ளார் வியப்பிலதே;

நூலளவில் நின்றதெலாம்
நுவன்றிடவோ எவருமிலை,
காலளவும் பெருமக்கள்
கண்ணியத்தை அறியகிலார்,
சிற்பமதில் பொதிந்துள்ள
சீர்முற்றும் எவரறிவார்,
சொற்பமதும் விவரித்துச்
சுட்டிடுவார் யாருளரே! 2.

அருமையையும் பெருமையையும்
அறிந்தெழுதக் கதைபோதா,
பருமையதாய் உட்சான்றும்
பாச்சான்றும் மிகவேண்டும்,
குத்தியதின் பழஞ்சரிதம்
குறிக்கவிலை அந்நகரார்,
பத்திதனில் பண்டிதர்கள்
பழவரலா றெழுதவிலை;
ஆங்கிலர்கள் சிற்சிலரோ
அவராய்ந்த வரலாற்றைப்
பாங்குளதாய்த் தம்மொழியில்
பதித்துள்ளார், அதுகண்டே
அவற்றையெலாம் தொகுத்தெடுத்தே
அமைப்புகளாய் வகுத்திட்டே
நுவற்றிட்டேம் இவையன்றி
நூதனமாய் யாதுமிலை 3.

கருநாட்டுப் பேரரசு
கவின்ஒளியில் விளங்கியகால்
உருநாட்டுப் பெரும்நூல்கள்
உதிக்கவில்லை அதனிடையே;
நாடெங்கும் கட்டிடங்கள்
நாட்டித்தம் பெருமையினை
வீடெங்கும் புகழ்ந்திடவே
விளைத்தனரால் மிகவிரிவாய்;
கோயில்கள் குளத்தடங்கள்
கோட்டையுடன் கொத்தளங்கள்
வாயில்கள் கோபுரங்கள்
வளம்பெறவே விதித்தனரால்;
திவ்வியமாய் அத்தகைய
சின்னங்கள் அதன்பெருமை
செவ்வியதாய்க் காட்டிவரும்
செய்யுளதற் கில்லையென்க. 4

குத்திதனக் கித்தகைய
குறிப்பதுவே அமைந்திருக்கும்,
அத்தகைவும் கருநாட்டின்
அகப்பகுதி ஆனதினுல்,
வரலாறு சொலும்பெருமை
வளமையெலாம் இம்மலையே
தரலாகும் எனஎண்ணல்
தப்பாகும் இந்நாளில்,

பழஞ்சின்னம் பாழடைந்துப்
பலஇடங்கள் பட்டொழிந்து
விழுஞ்சின்னம் எங்கெங்கும்
வேற்றுமைதான் காட்டிடுமே;
பண்டையநாட் பெருநகரம்
பழங்குப்பைச் சேரியைப்போல்
இண்டைபெருச் சிற்றூராய்
இழிந்திருக்கும் இந்நாளில். 5.

ஆயினுமென், பழஞ்சரிதம்
ஆய்ந்தறிவோர் இங்குற்றால்,
கோயிலினில் காண்பெருமை
குத்தியுமுட் கொண்டிருக்கக்
கண்டிடுவார், அதைப்புகழும்
காட்சிகளும் வியப்புதரக்
கொண்டிடுவர், முன்னையநாட்
கவின்பெருமை எதிர்நிற்கும்,
அப்பருக்கோ ஐயாற்றில்
அருளியதோர் அருங்காட்சி
செப்பரிதே, மற்றவர்க்கச்
சீர்முழுதும் கிட்டிடுமே;
அதுபோலும் குத்திதனில்
அறிவாளர் காண்பதும்
பொதுவோர்கள் கண்டிலரேல்
புதிதன்று பண்பாடே.

V2161 N52
தமிழ்நாடு ... காப்பகம்
19/141
சென்னை-600 008

பங்கஜா மில்ஸ்,
பிரிண்டிங் பிரஸ்,
கோயமுத்தூர்.

# வேறு நூல்கள்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | கடலின் கண்முத்து அல்லது யான்கண்ட இலங்கை (அரியபயண நூல்) | .... | 3 | 8 | 0 |
| 2 | இதுவோ எங்கள் கோவை (மாணவர்) | .... | 2 | 0 | 0 |
| | (கோவைநகர் சரிதம்) உயர்ந்த பதிப்பு | .... | 3 | 0 | 0 |
| 3 | எங்கள் நாட்டுப்புறம், (மாணவர்) | .... | 1 | 8 | 0 |
| | (அரிய செய்திகள் பாடல்கள்) உயர்ந்தது | .... | 2 | 0 | 0 |
| 4 | (தமிழ்நாட்டுச்) செயற்கைநலம் (அரியபணிகள்) | .... | 1 | 8 | 0 |
| 5 | சிறுகதைத் திரள் (20 சிறுகதைகளும் 5 செய்யுட்களும்) | .... | 1 | 0 | 0 |
| 6 | கோயிற் பூனைகள் 2-ம் பதிப்பு (நகைச்சுவைக் கதைகள்) | .... | 1 | 0 | 0 |
| 7 | வீட்டு எலிகள் (இல்லறவாழ்க்கைக் கதைகள்) | .... | 1 | 4 | 0 |
| 8 | காட்டு எருமைகள் (ஆடம்பர வாழ்க்கைக் கதைகள்) | .... | 1 | 4 | 0 |
| 9 | இளைஞர் பாடல் (எளிய பாடல்கள்) | .... | | 12 | 0 |
| 10 | வாழ்க்கையோ கவலையோ (கற்பனைக் கவிதை) | .... | 1 | 12 | 0 |
| 11 | மறைந்த பெருமை (செய்யுட் சரிதை) | .... | 1 | 8 | 0 |
| 12 | சுந்தரமூர்த்தி நாயனாரும் கொங்குநாடும் (ஆராய்ச்சி நூல்) | .... | 0 | 12 | 0 |
| 13 | கொங்குநாட்டுக் கட்டுரைகள் 9 (1-கட்டு) | .... | 1 | 0 | 0 |
| 14 | கொங்குமலர் (பழைய பிரதிகள்) நான்கு ஆண்டுகள், ஆண்டு ஒன்றுக்கு | .... | 4 | 0 | 0 |
| 15 | சிவக்கவிமணி வாழ்க்கைத்திறன் (C. K. S. வரலாறு) | .... | 0 | 8 | 0 |
| 16 | கோவை கிழார் வாழ்க்கை வரலாறு | .... | 0 | 4 | 0 |

கிடைக்கும் இடம் :—

**கோவை நிலையப் பதிப்பகம் லிமிடெட்**

4/89, திருச்சிப்பாதை, கோயமுத்தூர்.